பக்கங்கள்: 12
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 19 வெள்ளிக்கிழமை 04.09.2020 கதிர் 299

### இது ரகசியம் அல்ல!

தேர்தல் பின்னடைவுகளை அடுத்து இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டதாகக் கருதப்பட்ட குழப்பங்கள், குத்து வெட்டுகள் தணிந்து விட்டன போன்று தோன்றின. ஆனால் நிலைமை அப்படியல்ல என்கின்றன விடய மறிந்த உள்வீட்டு பக்கம்02 »



## ராஜபக்ஷக்களின் காட்டாட்சிக்கு ஒருபோதுமே அனுமதியோம்!

### முற்போக்குச் சக்திகளை அணிதிரட்டி எதிர்ப்போம்; ‘20’ சட்டமூலம் தொடர்பில் சுமந்திரன் எம்.பி. கருத்து

அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டத்தை அடியொற்றியதாகவே 20 ஆவது திருத்தச் சட்டமூலம் அமைந்துள்ளது. மீண்டும் காட்டாட்சிக்கு இது வழிவகுத்துள்ளது. இதற்கு நாம் ஒரு போதும் அனுமதி வழங்கமாட்டோம். முற்போக்குச் சக்திகளை அணிதிரட்டி நாடாளுமன்றத்துக்கு உள்ளும் வெளியிலும் இந்தச் சட்டமூலத்தை முழுமையாக எதிர்ப்போம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். பக்கம் 02 »

# மீண்டும் சர்வாதிகார ஆட்சிக்கு அடித்தளம் இடும் ‘20’ திருத்தம்!

## நேற்று வெளிவந்த வர்த்தமானியில் அம்பலம்

- ★ அரசமைப்பு பேரவை 'அவுட்' ★ 2 சுயாதீன ஆணைக்குழுக்கள் நீக்கம்.
- ★ நாடாளுமன்ற பேரவையில் சிவில் பிரதிநிதிகளுக்கு இடமில்லை.
- ★ ஓராண்டு முடிந்ததும் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியும்.
- ★ உயர் நியமனங்களை வழங்கும் அதிகாரம் ஜனாதிபதி வசம்.
- ★ பிரதமரைக்கூட ஜனாதிபதி நீக்கலாம்



**கொழும்பு, செப்ரெம்பர் 04**

**நாட்டில் மீண்டும் சர்வாதிகார ஆட்சியை நிலைநிறுத்தும் வகையிலேயே அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. நேற்று வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலில் இது அம்பலமாகியுள்ளது.**

**20 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் பிரகாரம் நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நடைபெற்று ஓராண்டு முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.**

பக்கம் 11 »

## தீப்பற்றிய கப்பலிலிருந்து மீட்கப்பட்ட மாலுமி காயங்களுடன் கல்முனை வைத்தியசாலையில்



அம்பாறை,செப்.4

அம்பாறை, சங்கமன்கண்டி கடற்பிராந்தியத்தில் தீப்பற்றி எரிந்த வெளிநாட்டு எரிபொருள் கப்பலில் இருந்து மீட்கப்பட்டவர்களில் மாலுமி தீக்காயங்களுடன் இருந்தமையையடுத்து அவர் கல்முனை பக்கம் 02 »

## மீண்டும் டெங்கு நோய் தலைதூக்கும் அபாயம்

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து, டெங்கு நோய் மீண்டும் தலைதூக்கும் அபாயம் காணப் படுகின்றது எனத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரி வித்துள்ளது.

இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதி வரை டெங்கு பக்கம் 02 »

## ஆட்டத்தை தொடங்கிய கோத்தாவின் செயலணி!

### குச்சவெளியில் வயலுக்குள் மக்களை செல்லவிடாமல் பிக்கு அச்சுறுத்தல்



திருகோணமலை – குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள திரியாய்க் கிராமத்தில் தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வரும் ஆயிரம் ஏக்கர் காணிக்குள் செல்ல கிழக்கு தொல் பொருள் செயலணி உறுப்பினரான பிக்கு பக்கம் 02 »

## வடக்கில் 4,230 பேருக்கான அரச நியமனங்களுக்கு ஆப்பு

### ஒரு லட்சம் பேருக்கு வேலை வழங்கும் திட்டத்தில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்.04

வறிய குடும்பங்களில் ஒரு லட்சம் பேருக்கான வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தில் வடக்கு மாகாணத்திற்கு அனுமதிக்கப்பட்ட 13 ஆயிரத்து 540 பேரில் 4 ஆயிரத்து 230 பேர் நீக்கப்பட்டு எஞ்சிய தொகையினருக்கு மட்டுமே நியமனம் வழங்கப்படவுள்ளது.

வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சம் பேருக்கான வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணத்தைத் தற்சமயத்திற்குக் கவனத்தில்கொள்வதில்லை என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு கடந்த 19ஆம் திகதி மாலை அவசர உத்தரவைப் பிறப்பித்திருந்தது. பக்கம் 02 »

## கஜேந்திரகுமார் கட்டும் மாளிகையில் சிங்களத் தொழிலாளி விழுந்து சாவு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்.04

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் புதிதாக அமைக்கும் மாளிகையில் பணியாற்றிய சிங்கள ஊழியர் ஒருவர் மாடியில் இருந்து வீழ்ந்து மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் இந்துல (வயது – 38 )என்னும் காலி மாவட்டத்தைச் சேர்ந்த இரு பிள்ளையின் பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வட்டாரங்கள்.

விரைவில் ஓர் அதிரடி முடிவு பற்றிய அறிவிப்பு வரலாம் என்றார் ஓர்அன்பர். என்னவென்று தேடிப் பார்த்தேன்.

கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கத்திடம் இருந்துதான் அந்த அதிரடி முடிவு வரும் எனத் தெரிகின்றது. கடந்த வாரம் மத்திய குழுவில் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தபோதும் அவர் அசைந்து கொடுக்கவில்லை. பலரும் அவரைத் தாக்கியபோதும் 'பிடித்து வைத்த பிள்ளையார்' போல அசையாமல் இருந்து சாதித்தார்.

ஆனால், இப்போது தமது இராஜினாமாக் கடிதத்தை முன்வைக்க அவர் தயாராகி விட்டார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் மூலம் அறியவந்தது.

கடைசியாக நடந்த மத்திய குழுக்கூட்டத்தில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தம்மை மிக மோசமாக விமர்சித்தமை குறித்து அவர் மிகவும் நொந்து போயிருக்கின்றார் என்று தெரிகின்றது.

*"நாகரிகம்கருதிநான்பலவிடயங்களை வெளிப்படுத்தவில்லை. பல இரகசியங்களை, இரகசியங்களாகவே விட்டு விட்டேன். ஆனால் கட்சித் தலைவர் அந்த நாகரிகத்தை மறந்து – மறைத்து – பேசியமை என் மனதை ஆழமாகப் பாதித்து விட்டது. ஏதோ தான் அந்தத் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை விரும்பாதவர் போலவும், பெண்களுக்கு அதை ஒதுக்குவோம் என்றுதான் தான் ஆரம்பத்தில் கூறினார் என்றும், அதையே செயலாளரிடம் (என்னிடம்) தாம் ஆரம்பத்தில் இருந்து தெரிவித்து வந்தார் என்றும் அவர் (தலைவர்) மத்திய குழுக் கூட்டத்தில் திரும்பத் திரும்பக் கூறினார். பின்னர் ஆதரவாளர்கள், கட்சியின் முக்கிய செயற்பாட்டாளர்கள் வந்து கேட்டதால்தான் தமது பெயரைப் பரிந்துரைக்கத் தாம் ஒப்புக் கொண்டார் என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.*

*"அப்படிக் கூறிவிட்டு என்னை மிக மோசமாக அவர் விமர்சித்தார். ஆனால் உண்மையில் அவர் அப்படிக் கூறியவை தவறு. ஆரம்பத்தில் இருந்தே என்னுடன் பேசிய இரண்டு தடவையுமே தம்மைத் தான் அந்தத் தேசியப் பட்டியலுக்குப் போட வேண்டும் என்றே அவர் ஒரே பிடிவாதமாக நின்றார். அதனால்தான் நாங்கள் சில முடிவுகளை எடுக்க வேண்டிவந்தது. இல்லையேல் அவருக்குச் சொல்லாமல் கடிதம் எழுத வேண்டிய தேவை எனக்கு இருக்கவில்லை. ஆரம்பம் முதல் தமக்கு அந்த இடம் வேண்டும் என்று அவர் ஒன்றைக் காலில் அடம் பிடித்தமையால்தான் சில விடயங்களை நாம் முறையாகச் செய்ய முடியாமல் போயிற்று. இதையெல்லாம் மூடிமறைத்து, அவர் பேசியமையை நான் நாகரிகம் கருதி கேட்டுக்கொண்டிருந்தேன். அங்கேயே நான் உண்மையைப் போட்டு உடைத்திருக்கலாம். அப்படி நான் செய்யவில்லை. அப்படிச் செய்யாமல் இருந்த என்னை அவர் மோசமாக விமர்சித்தமை தவறு. அத்தகைய தலைவருடன் சேர்ந்து செயலாற்றுவது கஷ்டம். பதவியைத் துறந்து வெளியே வந்தால் தான் சில உண்மைகளை பதிவு ஆதாரங்களோடு வெளியில் வைக்கலாம். பல உண்மை முகங்களை வெளிப்படுத்தலாம். அதனால் என் இராஜினாமாவுக்குப் பின்னர் பல விடயங்கள் வெளியாகும்."* – என்ற சாரப்பட கட்சியின் சில முக்கிய தரப்புகளுக்கு அவர் விசனத்துடன் கூறியிருக்கின்றார் என மிக நம்பகமாக அறிய வருகின்றது.

அது, உண்மை என்றால் – ஆதாரங்கள், உரையாடல் விவரங்கள் வெளியே வரும் என்றால் – நடந்து முடிந்த மத்திய குழுக் கூட்டம் சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த விவகாரம் என்றாகி விடும்.

★ ★ ★

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் பண்ணைகள், முன்பள்ளிகள் போன்றவற்றில் நம்மவர்கள் பல நூற்றுக் கணக்கானோர் பணி புரிகின்றமை தெரிந்த விடயம்தான்.

அந்த சிவில் பாதுகாப்புத் திணைக்களம் உருவாக்கப்பட்டு 9 வருடங்கள் இன்று பூர்த்தியாகின்றதாம்.

அதனை ஒட்டி கிளிநொச்சி, புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் இன்று விசேட வழிபாடும், கொண்டாட்டங்களும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதுவல்ல விடயம், இந்த நிகழ்வில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவர்களுக்கு அங்கேயே கோவிலிலேயே அன்னதானமும் நடக்கப்போவதாகக் கேள்வி.

ஆனால் இந்த ஏற்பாடுகள் குறித்து சுகாதாரப் பிரிவினருக்கு அறிவிக்கவேயில்லை என்றும் தகவல்.

'அன்னதானக் கந்தன்' என்று வரலாற்றுப் பெயர் பெற்ற செல்வச்சந்நிதி ஆலயத்தில் அன்னதானத்துக்குத் தடை.

சிவில் சேவைத் திணைக்களம் மட்டும் ஆயிரத்துக்கு அதிகமானோரை ஒன்று கூட்டி அன்னதானம் செய்வதற்கு அனுமதித்தவர்கள் யார்?

முழுசுகின்றது சுகாதாரப் பிரிவு!

–மின்னல்–

---

## கஜேந்திரகுமார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணம், நல்லூர் குறுக்கு வீதியில் தற்போது புதிதாக ஒரு பெரிய இல்லம் ஒன்றை அமைத்து வருகின்றார். இவ்வாறு அமைக்கும் இல்லத்தின் கட்டுமானப் பணிகளிற்கு தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்களையே அவர் ஒழுங்குபடுத்தியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு அமைக்கப்படும் இல்லத்தின் பணிகள் முடிந்து நேற்று முன்தினம் இரவு ஐவர் மேல் மாடியில் படுத்துறங்கியுள்ளனர். இரவு சுமார் 11.30 மணியளவில் ஒருவர் படுக்கையில் இருந்து எழுந்து வெளியே செல்ல முற்பட்ட சமயம் மாடியில் இருந்து தவறி வீழ்ந்துள்ளார். இவ்வாறு வீழ்ந்தவரை அம்புலன்ஸுக்குத் தகவல் வழங்கி போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

வைத்தியசாலையில் மருத்துவர்கள் பரிசோதித்த வேளையில் ஏற்கனவே உயிர் பிரிந்து விட்டமை உறுதி செய்யப்பட்டனர்.

இந்த மரணம் தொடர்பில் பொலிஸார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் – பிறேம்குமார் ஆகியோர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு மரண விசாரணையை மேற்கொண்டனர்.

---

## மீண்டும் டெங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காரணமாக 25 மரணங்கள் சம்பவித்துள்ளன என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

அத்தோடு, இக்காலப்பகுதியினுள் 26 ஆயிரத்து 238 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனவே, தங்களது சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்குமாறு பொதுமக்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

---

## ராஜபக்ஷக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தின் வர்த்தமானி அறிவித்தல் இன்று (நேற்று) வெளிவந்துள்ளது. அதை நான் உன்னிப்பாகப் பார்த்தேன். அதிலுள்ள பெரும்பாலான விடயங்கள் கடந்த காலத்தில் ராஜபக்ஷக்களின் காட்டாட்சிக்கு வழிவகுத்த 18ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள விடயங்களே உள்ளன. அதாவது 18ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்திய 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு முடிவுகட்டும் வகையிலேயே 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை ராஜபக்ஷ அரசு தயாரித்துள்ளது. இதனூடாக ஜனாதிபதியின் கை மேலோங்கியுள்ளது. குடும்ப ஆட்சி வலுப்பெற்றுள்ளது. எனவே, மீண்டும் சர்வாதிகார ஆட்சி – காட்டாட்சி ஆட்சி – தலைவிரித்தாடவுள்ளது.

இலங்கை ஜனநாயக நாடு என்றால் இங்கு சர்வாதிகார ஆட்சிக்கோ, காட்டாட்சிக்கோ அல்லது குடும்ப ஆட்சிக்கோ ஒருபோதும் அனுமதியளிக்க முடியாது.

முற்போக்குச் சக்திகளை அணிதிரட்டி நாடாளுமன்றத்துக்கு உள்ளும் வெளியிலும் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாம் முழுமையாக எதிர்ப்போம் – என்றார்.

# கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3,111 ஆக உயர்வு

இலங்கையில் மேலும் 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கட்டாரில் இருந்து வந்த 5 பேருக்கும் மற்றும் குவைத்தில் இருந்து வந்த 2 பேருக்கும் இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 3, 111 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்றைய தினம் மேலும் 06 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ள நிலையில் பூரணமாக குணமடைந்தோரின் எண்ணிக்கை 2, 889 ஆக அதிகரித்துள்ளது.

தற்போது, 210 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான 12 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## வடக்கில் 4, 230...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
க.பொ.த சாதாரணம் வரை கல்வி கற்றவர்களில் இருந்து நாடு முழுவதும் ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பினை வழங்கவுள்ளதாக அறிவித்த அரசு, தற்போது வடக்கு கிழக்கில் மட்டும் அதனை நிறுத்த உத்தரவிட்ட அதேநேரம் ஏனைய 7 மாகாணங்களிலும் அதனை வழங்க அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வாறு இடைநிறுத்துவதற்கான உத்தரவு வடக்கு கிழக்கின் 8 மாவட்டத்திலும் உள்ள மாவட்டச் செயலகங்களிற்கு கடந்த 19ஆம் திகதி மாலை தொலைநகல் மற்றும் மின் அஞ்சல்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த எண்ணிக்கை ஏனைய 7 மாகாணங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு ஒரு லட்சம் வேலை வாய்ப்பும் 7 மாகாணத்திற்குள் முடக்கப்பட்டு விடுமா என்ற ஐயம் அப்போது எழுப்பப்பட்டது.

இதேநேரம் வடக்கு கிழக்கில் போட்டியிட்ட அரச ஆதரவுக் கட்சிகள் இந்த வேலை வாய்ப்பினை வழங்குவதாக ஆசை வார்த்தைகள் கூறியே இளையோரின் வாக்கினையும் தேர்தல் பணிகளையும் பெற்றன என்ற குற்றச்சாட்டுக்களும் எழுந்தன.

இந்த நியமனத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 6 ஆயிரத்து 626 பேரும் , கிளிநொச்சியில் 2 ஆயிரத்து 261பேரும், மன்னாரில் ஆயிரத்து 830 பேரும், முல்லைத்தீவில் ஆயிரத்து 565 பேரும், வவுனியாவில் ஆயிரத்து 258 பேரும் என 13 ஆயிரத்து 540 பேரும் நியிமிக்கப்படத் தயாராக இருந்தனர்.

இவர்களிற்கு கடந்த 31ஆம் திகதி முதல் நியமனம் வழங்கப்படும் எனவும் மாவட்டச் செயலகங்களிற்கு முன்னர் உறுதியளிக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதும் வடக்கு கிழக்கிற்கு அதிக நியமனம் செல்வதாகத் தெரிவித்து அனைத்தும் இடை நிறுத்தப்பட்டு தற்போது ஒரு கிராம சேவகர் பிரிவில் 10 பேரிற்கு மட்டுமே என்ற அடிப்படையில் குறித்த எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்படுகின்றது.

இதனால், யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட 6 ஆயிரத்து 626 பேரிற்குப் பதிலாக 4 ஆயிரத்து 350 பேருக்கும் –

கிளிநொச்சியில் 2 ஆயிரத்து 261 பேரிற்கு வழங்கப்பட்ட அனுமதி 950 பேருக்கும் – மன்னாரில் ஆயிரத்து 830 பேரிற்கு முன்பு அனுமதிக்கப்பட்ட நிலையில் தற்போது அது ஆயிரத்து 530 பேருக்கும் – எனக் குறைக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு முன்னர் ஆயிரத்து 565 பேரிற்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் அது தற்போது ஆயிரத்து 360 பேர் ஆகக் குறைகின்றது.

வவுனியாவில் ஆயிரத்து 258 பேருக்கு என முன்னர் அனுமதிக்கப்பட்ட நிலையில் தற்போது ஆயிரத்து 20 பேரிற்கே அனுமதி கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வடக்கு மாகாணத்திற்கு முன்னர் 13 ஆயிரத்து 540 பேர் நியிமிக்க அனுமதிக்கப்பட்ட போதும் இந்த தொகையில் 4 ஆயிரத்து 230 பேரை நீக்கி 9 ஆயிரத்து 210 பேரிற்கு மட்டுமே நியமனம் வழங்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கிற்கு இடை நிறுத்தினாலும் இந்த நியமனம் கிடைக்கும் என அமைச்சர்களும் அரச ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரகளும் தெரிவித்தபோதும் இவ்வாறு பல ஆயிரம் பேரை நீக்கியமை தொடர்பில் அவர்கள் வாய் திறக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

## ஆட்டத்தை தொடங்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒருவரால் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ஆத்திக்காடு, நீராவிக்கண்டல், பள்ளப்பாவங்கை, பட்டாணிபாதி, பாவலங்கண்டல், கந்தப்பன் வயல் ஆகிய வயல் காணிகள் புதைபொருள் சார்ந்த இடங்கள் என்பதாகக் கூறி இந்த முறை பெரும்போகச் செய்கைக்கு மேற்படி வயல்காரர் இறங்கக்கூடாது. இறங்கினால் அனைவரையும் சிறையில் அடைப்பேன் என்று அரிசிமலைப் பிக்கு கூட்டம் போட்டு விவசாயிகளை மிரட்டியுள்ளார். மிரட்டிய பிக்கு ஜனாதிபதியால் நிறுவப்பட்ட கிழக்கு தொல்பொருள் செயலணியின் உறுப்பினர் ஆவார்.

பிக்குவின் மிரட்டலால் அச்சமடைந்த வயல் சொந்தக்காரர் தமது வயல்களுக்குச் செல்லாமல் உள்ளனர்.

விவசாயிகள் வயல் செய்வதற்கு யாரும் தடைவிதிக்க முடியாது என்பதை வலியுறுத்தும் ஒரு சந்திப்பு திருகோணமலை அரசாங்க அதிபர் அசங்க அபயவர்த்தனவுக்கும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் அவரது செயலாளர் க.ச.குகதாசன் ஆகியோருக்கும் இடையே நேற்று நடைபெற்றது.

எதிர்வரும் புதன்கிழமை குச்சவெளிப் பிரதேச செயலாளர் பணிமனையில் அனைத்து தரப்பினர்களையும் உள்ளடக்கிய ஒரு கூட்டம் நடத்துவதாகவும் அதில் இச்சிக்கலுக்குத் தீர்வு காணப்படுவதாகவும் முடிவு செய்யப்பட்டது.

இதில் தீர்வுகாண முடியாது போனால் நீதிமன்றம் செல்வதற்கான ஆயத்தங்கள் சமகாலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சந்திப்பின் போது க.ச.குகதாசன் கூறினார்.

---

## தீப்பற்றிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் நேற்று மாலை சேர்க்கப்பட்டுள்ளார்.

எல்மோர் (வயது – 57) என்ற பெயருடைய குறித்த மாலுமி பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தீப்பற்றி எரிந்த கப்பலில் இருந்து காயமடைந்த நிலையில் மாலுமி ஒருவர் உட்பட 18 பணியாளர்கள் இலங்கைக் கடற்படையின் கப்பல் ஒன்று மூலம் காப்பாற்றப்பட்டுள்ளனர் என்று கடற்படையின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சங்கமன்கண்டியிலிருந்து சுமார் 40 கடல் மைல் தொலைவில் நின்ற அந்தக் கப்பலில் நேற்றுக் காலை 7.45 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது.

பனாமா நாட்டுக்குச் சொந்தமான MT New Diamon– என்ற கப்பலே தீ விபத்துக்குள்ளாகியுள்ளது எனக் கடற்படையின் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

(முன்னர் வந்த செய்தி 10ஆம் பக்கத்தில்)

# அமைச்சர்கள் மற்றும் சகல அரச அதிகாரிகளும் புதனன்று அலுவலகங்களில் இருப்பது கட்டாயம்

## ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை

கொழும்பு, செப்.04

நாட்டுமக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிவதற்காக அமைச்சர்கள் உள்ளடங்கலாக அரச உத்தியோகஸ்தர்கள் அனைவரும் ஒவ்வொரு புதன்கிழமையும் தத்தமது அலுவலகங்களிலேயே இருக்கவேண்டும் என்றும் அன்றைய தினம் வேறு வேலைகளுக்காகச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்திருக்கிறார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது, மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிவதற்கான நேரம் போதுமானதாக இல்லை என்றும் அமைச்சரவை உபகுழுவின் பணிகள் உள்ளடங்கலாக தினமும் பல்வேறு வேலைகள் இருப்பதாகவும் அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்தே மக்களின் குறைகளையும் பிரச்சினைகளையும் கேட்டறிவதற்காக நாளொன்றை ஒதுக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இனிவரும் ஒவ்வொரு புதன்கிழமையும் மக்களின் முறைப்பாடுகளைக் கேட்டறிவதற்கு ஒதுக்கப்படுவதுடன் அன்றைய தினம் அமைச்சர்கள் உள்ளடங்கலாக அனைத்து அரச உத்தியோகஸ்தர்களும் தத்தமது



அலுவலகங்களில் இருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் வெள்ளத்தால் 1,409 பேருக்குப் பாதிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்.04

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள திடீர் மழை வீழ்ச்சி காரணமாக தாழ் நிலப்பகுதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியமையினால் பல இடங்களில் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இரு நாள்களாக ஏற்பட்ட மழை வீழ்ச்சி காரணமாக 368 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 409 பேர் பாதிப்படைந்துள்ளமையோடு 3 பேர் காயமடைந்துள்ளனர். இதே நேரம் 5 சிறிய வர்த்தகங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதே சமயம் 268 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என மாவட்டச் செயலகத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

முசலியில் 224 குடும்பங்களைச் சேர்ந்த 861 பேரும், நானாட் டானில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 154 பேரும், மன்னார் பிரதேச செயலாளர் பிரிவினில் 98 குடும்பங்களைச் சேர்ந்த 395 பேருமாக மொத்தம் ஆயிரத்து 409 பேர் பாதிப்படைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஷானி அபேசேகரா உள்ளிட்டவர்களுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

கொழும்பு, செப். 04

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஜுனி அபேசேகர மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ரோஹன மெண்டிஸ் ஆகியோரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த இருவரையும் நேற்று (வியாழக்கிழமை) கம்பஹா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டில் மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய அரசமைப்பு வரைவை உருவாக்க ஒன்பது நிபுணர்களைக் கொண்ட குழு

கொழும்பு, செப்.04

புதிய அரசியலமைப்பு வரைவை உருவாக்குவதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஸ் டி சில்வா தலைமையிலான 9 பேர் அடங்கிய குழு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத் தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பில், அமைச்சரவை இணை பேச்சாளரான, அமைச் சர் உதய கம்மன்பில இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான காமினி மாரப்பன, மனோஹர டி சில்வா, சஞ்சீவ ஜயவர்தன, சமன் ரத்வத்த, பேராசிரியர் ஜீ.எச்.பீரிஸ், கலாநிதி ஏ. சர்வேஸ்வரன், பேராசிரியர் நசீமா கமுறுடீன், பேராசிரியர் வசந்த செனவிரத்ன ஆகியோர் இந்த நிபுணர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பெயரிடப்பட்டுள்ளனர்.

# வவுனியா அல் அமீன் முஸ்லிம் ம.விக்கு குவைத் நிதியுதவியில் மாடிக் கட்டடம்







வவுனியா, செப்.04

குவைத் நாட்டின் நிதியுதவியில் வவுனியா பாவற்குளம் அல் அமீன் முஸ்லிம் மகாவித்தியாலயத்திற்கு இரண்டு மாடிக் கட்டடத்தைக் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஜனாப்.எஸ்.புகாரி தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் வேண்டுகோளுக்கமைய குவைத் நாட்டின் நிதியுதவியுடன் அல் ஹிமா இஸ்லாமிய சேவைகள் அமைப்பின் ஊடாக ஒன்றரைக் கோடி ரூபா செலவில் புதிய இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் அமைக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.இராதாகிருஷ்ணன், அல் ஹிமா இஸ்லாமிய சேவைகள் நிறுவனப் பணிப்பாளர் எம்.எம்.நூறுல்லாஹ், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# வவுனியாவில் அரச விடுதியை அனுமதியின்றி பயன்படுத்தியதாம் சிவசக்தி ஆனந்தன் தரப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , செப்.04

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளரும் நாடாளுமன்ற தேர்தலின்போது வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்டவருமான சிவ சக்தி ஆனந்தன் மாவட்டச் செயலகத்தின் விடுதியை இரகசியமாகப் பயன்படுத்தியமை தொடர்பில் மாவட்டச் செயலாளர் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி அரசிற்கு ஆதரவளித்த காலத்தில் அரசினால் வவுனியா மாவட்டச் செயலகத்திற்கு சொந்தமான விடுதிக் கட்டடம் ஒன்று சிவசக்தி ஆனந்தனிற்கு வழங்கப்பட்டு 15 ஆண்டுகளிற்கும் மேலாக வாடகை இன்றி பயன்படுத்தப்பட்டு வந்தது. 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலத்தில் ஏனைய கட்சிகள் அதனைச் சுட்டிக்காட்டியபோது இக் கட்டடத்தை உடன் மாவட்டச் செயலகத்திடம் ஒப்ப டைக்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு உத்தரவிட்டதனால் நீண்ட இழுபறியின் பின்னர் சிவசக்தி ஆனந்தனின் அலுவலகமாக பயன்படுத்திய மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான கட்டடம் மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாறு பகிரங்கமாக ஒப்படைக்கப்பட்ட கட்டடத்தை மீண்டும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஜனாதிபதி செயலக அனுமதியினைப் பெற்று பயன்படுத்தினார் என்று கூறப்பட்டது. இதனையடுத்து 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு வேட்புமனு தாக்கல் செய்தபோது இக் கட்டடத்தை மீள ஒப்படைக்குமாறு அனுப்பிய கடிதத்தின் பெயரில் கட்டடத்தின் திறப்புக்களை சிவசக்தி ஆனந்தன் மாவட்டச் செய லகத்தில் ஒப்படைத்தார்.

ஒப்படைத்த பின்பு 2020ஆம் ஆண்டிற்கான தேர்தல் ஓகஸ்ட 5 ஆம் திகதி இடம்பெற்றபோது அதில் சிவசக்தி ஆனந்தன் தெரிவு செய்யப்படவில்லை. அரச கட்டடத்தின் திறப்பு மாவட்டச் செயலகத்திலேயே இருந்துள்ளது.

தற்போது வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக ஈ.பீ.டீ.பியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் நியமிக்கப்பட்டமையையடுத்து இக் கட்டடத்தை அவரது பயன்பாட்டிற்கு வழங்குமாறு அமைச்சு பணித்தமையினால் நேற்றைய தினம் மாவட்டச் செயலகம் நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனிடம் திறப்புக்களைக் கையளித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் தனது ஆதரவாளர்கள் சகிதம் சென்று அரச விடுதியை திறந்தபோதுஅவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்ததாம். விடுதியின் பின் கதவினைத் திறந்து ஒரு தரப்பு உள்ளே கூட்டம் நடாத்திக்கொண்டு இருந்துள்ளதாம். இதனால் இந்த விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர் மாவட்டச் செயலாளரின் கவனத்துக்கு கொண்டு சென்றார்.

மாவட்டச் செயலாளர் சக அலுவலகர்கள் சகிதம் அந்த இடத்திற்கு சென்றபோது கட்டடத்தை தாங்கள் தொடர்ந்தும் பயன்படுத்த அனுமதிக்குமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோரினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதனை அமைச்சின் அனுமதி இன்றி தன்னால் வழங்க முடியாது எனத் தெரிவித்த மாவட்டச் செயலாளர் சகல வாசல் கதவுகளிற்கும் மாற்று பூட்டுகளைப் பயன் படுத்தி இறுகப்பூட்டிய பின்பே அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஜனநாயகத்துக்கு சாவுமணி

ஜனநாயகத்தை மேம்படுத்தும் நோக்கில் கொண்டு வரப்பட்ட 19ஆவது திருத்தம் அடியோடு நீக்கப்பட்டு, நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் கரங்களை மேலும் பலப்படுத்தும் விதத்தில் இருபதாவது அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படுகின்றது.

இது ஜனநாயகத்துக்கு சாவுமணி; சர்வாதிகாரக் கொடூரத்துக்கு வெற்றிலை வைக்கும் முட்டாள்தனம்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறவேண்டும் என்ற ஏற்பாடு அடியோடு அகற்றப்படுகின்றது.

தேர்தல்கள், பொலிஸ் துறை, நீதி நிர்வாகம் போன்ற விடயங்களைக் கையாள்வதற்கு சுயாதீன ஆணைக்குழுக்கள் செயற்பட்டன. அவற்றை நியமிக்கும் அதிகாரம் 19ஆவது திருத்தத்தின் கீழ் அரசமைப்புப் பேரவைக்கு வழங்கப்பட்டிருந்து. அந்தப் பேரவைக்கு சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மூவர் உள்வாங்கப்பட்டிருந்தனர். இருபதாவது திருத்தத்தில் இந்த சிவில் பிரநிதிகளின் இடம் ஒழிக்கப்படுகின்றது. அதனால் இந்த அரசமைப்புப் பேரவை நாடாளுமன்ற சபையாக மாறுகின்றது. அந்த நாடாளுமன்றப் பிரதிநிதிகளைக் கொண்ட சபையே ஆணைக்குழுக்களுக்கான பிரதிநிதிகளை நியமிக்கும் என இருபதாவது திருத்தம் கூறுகின்றது.

அதன்படி பார்த்தால் மேற்படி சுயாதீனக்குழுக்கள் நேரடியாக அரசியல்வாதிகள் மூலம் நியமிக்கப்படும் மோச நிலைமை மீண்டும் வருகின்றது.

தேர்தல், பொலிஸ், நீதி நிர்வாகம் போன்றவை சுயாதீனக் குழுக்களினால் பரிபாலிக்கப்படும் முறைமை ஜனாதிபதி உட்பட அரசியல் தரப்புகளின் தலையீட்டுக்கு இடமளிப்பதாக இனிமேல் மாறப் போகின்றது.

உத்தேச இருபதாவது திருத்தத்தின் வரைவு வடிவம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியாகியுள்ளது. இது இன்னும் இரண்டு வாரங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் அதன் விவரங்கள் பெரும் வாதப் பிரதிவாதங்களையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

பிரதமரின் பரிந்துரையில்தான் அமைச்சர்களை ஜனாதிபதி நியமிக்க வேண்டும் என்ற 19ஆவது திருத்த ஏற்பாடு விலக்கப்படுகின்றது. இருபதாவது திருத்தப்படி ஜனாதிபதி பெயரிடும் எம்.பிக்கள் அமைச்சராக முடியும். அதற்குப் பிரதமரின் பரிந்துரை அவசியமல்ல.

அத்தோடு ஜனாதிபதி அமைச்சுப் பதவிகள் எதனையும் வைத்திருக்க முடியாது என்ற 19ஆவது திருத்த ஏற்பாடு நீக்கப்படுகின்றது. தாம் விரும்பிய அமைச்சுக்களை ஜனாதிபதி தம் வசம் வைத்திருப்பதற்கு இருபதாவது திருத்தம் வழி செய்கின்றது.

19ஆவது திருத்தத்தின் கீழ், பதவியில் இருக்கும் பிரதமரை தம்மிஷ்டப்படி ஜனாதிபதி பதவி நீக்கம் செய்ய முடியாது.

அத்தோடு ஒரு நாடாளுமன்றம் அதிகாரத்துக்கு வந்து நான்கரை ஆண்டு காலத்துக்கு அதனை ஜனாதிபதி கலைக்க முடியாது. அதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை.

ஆனால் இந்த இரண்டு விடயங்களையும் இருபதாவது திருத்தம் தலைகீழாக மாற்றியமைக்கின்றது.

புதிய ஏற்பாட்டின்படி, பதவியில் இருக்கும் பிரதமரை தம்மிஷ்டப்படி பதவி விலக்கி விட்டு புதியவரை அந்த இடத்தில் நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்படுகின்றது.

அத்தோடு, ஒரு நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் ஒரு வருடம் பூர்த்தியானதும் எவ்வேளையிலும் அதனைத் தம் விருப்பப்படி முன்கூட்டியே ஜனாதிபதி கலைத்துத் தேர்தலுக்கு உத்தரவிடமுடியும் என்ற அதிகாரத்தையும் இருபதாவது திருத்தம் ஜனாதிபதிக்கு வழங்குகின்றது.

19ஆவது திருத்தம் நடைமுறைக்கு வரும் வரை இந்தக் காலம் ஒன்றரை வருடங்களாகவே இருந்தது. ஒரு புதிய நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் ஒன்றரை வருடம் முடியும் வரை அதனை ஜனாதிபதி கலைக்க முடியாது என்றிருந்த ஏற்பாட்டையே நான்கரை வருடங்கள் முடியும் வரை என்று 19ஆவது திருத்தம் மாற்றியிருந்தது.

அதனை ஒரு வருடம் என்று மாற்றுகின்றது இருபதாவது திருத்தம்.

புதிய திருத்த வரைவு நடைமுறைக்கு வருமானால் ஒரு நாடாளுமன்றத்தின் பதவி காலம் ஒரு வருடம் பூர்த்தியானதும், அதன் தலைக்கு மேல் நாடாளுமன்றக் கலைப்பு என்ற கத்தி எந்நேரமும் தலையைப் பதம் பார்க்கக் கூடியதாகத் தொங்கிக் கொண்டிருக்கும் ஆபத்து ஏற்படும். நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு முதலாம் வருடத்திலேயே அதன் சுயாதீனம் அற்றுப் போய்விடும். ஜனாதிபதியின் பரிவில் எக்காலமும் தங்கியிருக்கும் பரிதாப நிலைக்கு அது தள்ளப்பட்டுவிடும்.

இதேவேளை அமைச்சர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் ஏற்பாடும் நீக்கப்படுகின்றது.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் அரசமைப்பின் 19ஆவது திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்ட ஜனநாயகத்துக்கான முற்போக்கு விடயங்களை எல்லாம் நீக்கி, மீண்டும் 18ஆவது அரசமைப்புத் திருத்த நிலைக்கு - இருண்ட யுக ஆட்சிக்கால சூழலுக்கு - நாட்டை இட்டுச் செல்லும் ஏற்பாட்டுக்கு இப்போது முழுமூச்சாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவ்வளவுதான்!

# இரண்டுக்கு மேல் பிள்ளைகள் வடக்கில் பெறுவது கிடையாது

## இது இனப் பரம்பலைப் பாதிக்குமாம்

வடக்கு மாகாணத்தில் பொதுவாக இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெறுகின்றமையானது குறைந்து செல்கின்றமையால் எமது இனப் பரம்பலை நிச்சயமாக அது பாதிக்கும் எனவும் கிளிநொச்சி மாவட்டத்தில் எவருக்கும் குடும்பக் கட்டுப்பாட்டை வற்புறுத்துவதில்லை எனவும் தாய், சேய் குடும்பநல மருத்துவர் வைத்திய கலாநிதி நிமால் கிஸ்ரொபல் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபையின் ஏற்பாட்டில் 2020 ஆம் ஆண்டில் ஐந்து பிள்ளைகளுக்கு மேல் பெற்ற குடும்பங்களுக்கான சத்துணவு வழங்கும் விசேட வேலைத் திட்டத்தில் அதிதியாகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் மற்றைய மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் கிளிநொச்சி மாவட்டத்தில்தான் தாய்மார் போசணை குறைவாகக் காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக 50 வீத கர்ப்பவதிகளுக்கு குருதிச்சோகை நோயானது ஏற்படுகின்றது.

இதற்கு, முக்கியமான காரணங்களில் ஒன்று போசணைக் குறைபாடாகும். ஆகவே அவ்வாறான தாய்மார் ஒவ்வொரு பிள்ளைகளையும் பெறும்போது இந்தப் போசணைக் குறைபாடு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகரித்துச் செல்லும்.

எமது மாவட்டமானது மற்றைய மாவட்டங்களோடு ஒப்பிடும்போது வறுமையான மாவட்டமாகும். இந்த போசணைக் குறைபாட்டிலிருந்து தாய்மாரை மீட்கும் பொறுப்பு எம் அனைவருக்குமுரியது. இவ்விடயம் தனியே சுகாதாரத் துறையினர் மாத்திரமல்லர், அனைத்து அரச, அரச சார்பற்ற துறையினரும் இணைந்து கண்டறிய வேண்டிய ஒன்றாகும்.

அந்த வகையில் இன்று கரைச்சி பிரதேச சபை ஏற்படுத்தியுள்ள இந்தத் திட்டமானது பாராட்டுக்குரியது. இந்தத் திட்டமானது ஐந்து பிள்ளைகளைப் பெற்றவர்களுக்கென ஆரம்பித்தது சிறந்தது. ஆனால் இந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்களாக இங்கு உள்ளவர்கள் மிகவும் சொற்பமானவர்களே.

இவ்வாறான திட்டங்களை இரண்டு பிள்ளைகளிலிருந்து மூன்றாவது பிள்ளையை பெறுகின்றவர்களுக்கும் வகுக்க வேண்டும். அவ்வாறு செய்தாலே எமது சமூகத்தில் வினைத்திறனாக இத்திட்டத்தை கொண்டுசெல்ல முடியும். இதன்மூலம் நாங்கள் எதிர்பார்க்கின்ற பெறுமதிகளைப் பெறமுடியும்

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் எவருக்கும் குடும்பக் கட்டுப்பாட்டை வற்புறுத்துவதில்லை. அதிலும் குறிப்பாக நிரந்தர கட்டுப்பாட்டு முறைகளை இப்போது நாங்கள் செய்வதில்லை. மருத்துவ காரணங்கள் இருந்தால் மாத்திரமே நிரந்தர குடும்பக் கட்டுப்பாட்டிற்கு பரிந்துரைக்கின்றோம்.

அது தவிர்ந்து இரு பிள்ளைகளுக்கான இடைவெளியாக 2 வருடங்களை மாத்திரமே தற்காலிக குடும்பக் கட்டுப்பாட்டு முறையாக பரிந்துரைக்கின்றோம். குழந்தைகளை பெற்றுக் கொள்வதை ஊக்குவிக்கும் வேலைத் திட்டங்களையும் நாங்கள் மேற்கொள்வதற்கு எண்ணியுள்ளோம்.

எமது மாவட்டத்தில் பிறப்பு வீதம் குறைந்து செல்வதனால் இவ்வாறான விசேட வேலைத் திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம். வடக்கு மாகாணத்தில் பொதுவாக இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெறுகின்றமையானது குறைந்து செல்கின்றது.

இது எமது இனப் பரம்பலை நிச்சயமாகப் பாதிக்கும். இவ்வாறான பாதிப்பிலிருந்து மீண்டெழுவதற்கு எதிர்காலத்தில் சுகாதாரத் துறை என்ற வகையில் பூரணமாக ஒத்துழைப்பு வழங்கப்படும். – என அவர் குறிப்பிட்டார்.

# 5 பிள்ளைகளுக்கு மேல் பெற்ற குடும்பங்களுக்கு சத்துணவுகள்

## மாதாந்தம் ரூ.3,000 பெறுமதிக்கு









ஐந்து மற்றும் அதற்கு மேல் பிள்ளைகளை பெற்றெடுத்த குடும்பங்களிற்கு கரைச்சி பிரதேச சபையினால் மாதாந்தம் மூவாயிரம் ரூபா பெறுமதியான சத்துணவு வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பமாகும் இந்த வேலைத்திட்டத்தில் இந்த ஆண்டில் இதுவரை 09 பேர் மாத்திரமே தகுதி பெற்றுள்ளனர் எனக் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

இவர்களிற்கு ஒரு மாதத்திற்கு மூவாயிரம் ரூபா பெறுமதியான சத்துணவினை வழங்கு வதற்கு பிரதேச சபை தீர்மானித்துள்ளது. ஒரு வருடத்திற்கு குறித்த சத்துணவு பொதிகள் பிரதேச சபையினால் வழங்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக்காலை 10 மணியளவில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் கலைவாணி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன், குடும்பநல சுகாதார வைத்தியர் நிமால் கிஸ்ரோபல், குடும்பநல உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வாக்கெடுப்பின்றியே ஐ.தே.க தலைவர் தெரிவு

கொழும்பு, செப். 04

ஐக்கிய தேசியக் கட்சிக்கான புதிய தலைவர் வாக்கெடுப்பின்றி தெரிவு செய்யப்படுவார் என அந்தக் கட்சியின் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் சிலருடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இவ் விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

கரு ஜயசூரிய, ருவான் விஜேவர்தன, வஜிர அபேவர்தன ஆகிய மூவரில் ஒருவரே செயற்குழுவின் ஒப்புதலுடன் தெரிவு செய்யப்படவுள்ளார். இது தொடர்பில் இன்று நடைபெறும் செயற்குழுக் கூட்டத்தில் இறுதி முடிவெடுக்கப்படவுள்ளது.

# இரு வேறு விபத்துக்களில் கிளிநொச்சியில் மூவர் காயம்

கிளிநொச்சியில் நேற்றும், முன்தினமும் இடம்பெற்ற விபத்துக்களில் மூவர் காயமடைந்துள்ளனர். இதில் ஒருவர் மேலதிக கிசிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாக ஏ9 பிரதான வீதியில் பாரவூர்தி மற்றும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்தார். அவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளார்.

இதேவேளை நேற்று காலை கிளிநொச்சி டிப்போ வீதியில் ரயில் நிலையக் கடவைக்கு அருகில் ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்தில் ஓட்டோ குடை சாய்ந்தோடு இரு பாடசாலை சிறார்கள் சிறு காய முற்றுள்ளனர்.





# பண்டாரவன்னியனின் சிலை படிக்கட்டு வீதி திருத்த நிதியிலேயே கட்டப்பட்டது!

## என்கிறது வவுனியா நகரசபை

வவுனியா, செப்.04

வவுனியா நகரசபைக்குட்பட்ட 6 ஆம் வட்டாரத்தில் வீதி திருத்தத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலேயே பண்டாரவன்னியன் சிலைக்கான படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டனஎனவவுனியா நகரசபை தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கம்பீரமாகக் காணப்பட்ட பண்டாரவன்னியனின் சிலைக்கு வருடத்தில் ஒருதடவை நினைவுதினத்தில் மாலை போடுவதற்கு வசதியாக மூன்று லட்சத்து எழுபத்தி ஐயா யிரம் ரூபாய் (3,75,000) பெறுமதியில் படிக்கட்டு அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், அந்தப் படிக்கட்டு அமைக்கப்பட்டமை மற்றும் நிதி விடயங்களைக் கோரி தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாக தகவல்



கோரிக்கை விடுக்கப் பட்டிருந்தது.

இதற்கமைய, நகரசபையால் வழங்கப்பட்ட தகவ லின் அடிப்படையில் கடந்த பெப்ரவரி 20 ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைவாக ஆறாம் வட்டாரத்திற்கு 45 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டம் பிரிக்கப்பட்டதாகவும் அதில் சிறைச்சாலை வீதியூடாகச் சென்று சந்தை உள்வட்ட வீதிக்கு செல்லும் வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு ஒதுக்கப்பட்ட ஐந்து லட்சத்து அறுபத்து ஐயாயிரம் ரூபாயில் இரண்டு லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் அந்தப் பிரதேச வட்டார உறுப்பினரின் முன்மொழிவுடன் ஏகமனதாக பண்டாரவன்னியன் சிலைக்கு படிக்கட்டு அமைப்பதற்கு மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆறாம் வட்டாரத்தில் பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் வருடத்தில் ஒருதடவை பயன்படுத்துவதற்காக அபிவிருத்திக்கு வந்த நிதியை மாற்றி படிக்கட்டுகள் அமைக்கும் நட வடிக்கையில் வட்டார உறுப்பினர் ஈடுபட்டமை தொடர் பாக பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை -

**யாழ் பிரதேசத்தில் -**

நல்லூர் பிரதேசம், கச்சேரி நல்லூர் வீதி, நாயன்மார்கட்டு, கனகரட்ணம் சந்தியிலிருந்து நல்லூர் செட்டித்தெரு வரை, இலந்தைக்குளம், புங்கன்குளம், முல்லை, பூம்புகார், நாவலடி,

அரியாலை கிழக்கு, கல்வியங்காட்டு சந்தி, கிளிகடைச் சந்தி, நல்லூர் பூங்கனிச் சோலை, இராமலிங்கம் சந்தி, ஆடியபாதம் வீதி, இராஜ வீதியிலிருந்து கோப்பாய் பொலிஸ் நிலையம் வரை, சட்டநாதர் வீதி, நல்லூர் கோவில் வீதியின் ஒரு பகுதி, சிவன் அம்மன் வீதியின் ஒரு பகுதி, நல்லூர் மாநகரசபை அலுவலகம், நல்லூர் செம்மணி வீதி வட மாகாண கல்வியமைச்சின் அலுவலகம், நாயன்மார்கட்டு Carlton Sports Network (CSN), SOS பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, காங்கேசன்துறை பொலிஸ் நிலையம், சீமெந்துக் கூட்டுத் தாபனம், காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி, வறுதத்தலைவிளான், பலாலி, காங்கேசன்துறை கடற்படைமுகாம், காங்கேசன்துறை கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை SLNS Uththara, பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி விமான நிலையம், 5வது பொறியியல் படைமுகாம் மயிலிட்டி, பலாலி விமானப்படை ஓய்வுகால விடுதி, மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம், பலாலி விமான நிலையம், நாவலடி வியாபாரிமூலை பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில் -**

ஆண்டியப்புளியங்குளம், வாரிக்குட்டியூர், நித்தியநகர், பூவரசங்குளம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில் -**

சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் Palmyra house கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, Palmyrah house கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத்தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற் சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்படும் என்று மின்பொறியிலாளர் அறிவித்துள்ளார்.

# வவுனியாவில் மூன்று நாள்களில் 52.4மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி





வவுனியா கடந்த மூன்று நாள்களில் 54.4 மில்லி மீற்றர் பதிவாகியுள்ளதாகவும் மழையுடான காலநிலை தொடரும் எனவும்வளிமண்டலவியல் திணைக்களத்தின் வவுனியா நிலைய பொறுப்பதிகாரி தா.சதானந்தன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தின் கடந்த 30 ஆம் திகதி தூறலுடான காலநிலை காணப்பட்டது. 31ஆம்திகதி 23.1மில்லிமீற்றரும், முதலாம் திகதி 26.7 மில்லிமீற்றரும், 2 ஆம் திகதி 2.6 மில் லிமீற்றரும் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மாவட்டத்தின் சில இடங்களில் கடந்த மூன்று நாள்களாக ஆலங்கட்டி மழையும் பெய்தது.

மழையுடான இந்தக். காலநிலை இன்னும் மூன்று நாள்களுக்கு நீடிக்கும். அத்துடன் இவ் வாறான காலநிலையின் பொது இடியுடன் கூடிய பலத்த காற்றும் வீசக்கூடும் எனவும் அவர்மேலும் தெரிவித்தார். (உ - 100)

# மஹரகமவில் விபத்து: இருவர் உயிரிழந்தனர்!

மஹரகம, நாவின்ன பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளமையுடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் வாகனம் ஒன்று பாதையை விட்டு விலகி மரத்துடன் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பான வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அதிகரிக்கும் கொரோனாத் தொற்று 24 மணி நேரத்தில் 9 பேருக்கு!

இலங்கையில் கடந்த சிலதினங்களாக கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்கிறது.

அதற்கமைய கடந்த 24 மணி நேரத்தில் 9 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கட்டாரில் இருந்து நாடு திரும்பிய ஒருவருக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து நாடுதிரும்பிய 2 பேருக்கும் குவைத்தில் இருந்து நாடு திரும்பிய 2 பேருக்கும் இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய 4 பேருக்கும் இவ்வாறு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 101ஆக அதிகரித்துள்ளது என அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேநேரம் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் 2 ஆயிரத்து 883 பேர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

அதேவேளை, வைரஸ் தொற்றுக்கு உள்ளான 206 பேர்தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இலங்கையில் இதுவரையில் 12 மரணங்கள் பதிவாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தநிலையில், இது தொடர்பாகவும் இன்றையசெயற்குழு கூட்டத்தில் அவதானம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir





# இலங்கையின் புதிய அரசியல் களத்தில் ஊசலாடும் இந்திய – இலங்கை ஒப்பந்தம்

இலங்கை அரசமைப்பின் 13 மற்றும் 19 ஆவது திருத்தங்களில் உள்ள சில நல்ல ஏற்பாடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசு புதிய அரசமைப்பைக் கொண்டு வரும் நடவடிக்கையில் இறங்கியுள்ள நிலையிலேயே முன்னாள் பிரதி நீதி அமைச்சர் டிலான் பெரேராவின் இந்தக் கருத்து வந்துள்ளது.

பதுளையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட டிலான் பெரேரா –

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக 20ஆவது திருத்தச் சட்டமூலம் கொண்ட வரப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

அந்த உறுதிமொழி நிறைவேறப்போகின்றது. 19ஆவது திருத்தத்தில் சில நல்ல விடயங்கள் உள்ளன. அவை பாதுகாக்கப்பட வேண்டும். அதேபோல் 13ஆவது திருத்தச் சட்டத்திலும் நல்ல விடயங்கள் உள்ளன.

எனவே, புதிய அரசமைப்பை இயற்றும்போது மேற்படி திருத்தங்களில் உள்ள நல்ல விடயங்களை உள்வாங்கவேண்டும் என்று கூறியுள்ளார்.

ஆனால் 13ஆவது திருத்தத்திலுள்ள அந்த நல்ல விடயங்கள் பற்றி அவர் விரிவாகச் சொல்லவில்லை.

### இந்திய - இலங்கை ஒப்பந்தம்

தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கும் முயற்சியாக 1987ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் பலனாக – தமிழர்கள் செறிந்துவாழும் வடக்கு, கிழக்கு பிராந்தியங்களுக்கு மாகாண சபை நிர்வாக முறையை வழங்கும் பொருட்டு 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

பிரித்தானியர் காலம் தொட்டே இலங்கையில் மாகாண அலகுகள் இருந்த போதிலும் அவை பெயரளவு நிர்வாகங்களாகவே இருந்தன.

சுதந்திர இலங்கையில் 1978இல் கொண்டுவரப்பட்ட இரண்டாம் குடியரசு அரசமைப்பில் 1987இல் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தமே 9 மாகாண அலகுகளுக்கும் நிர்வாக அதிகாரத்தை வழங்கியது.

இந்திய – இலங்கை ஒப்பந்த விதியின்படி, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தற்காலிக ஏற்பாடாக 1988இல் ஒரே நிர்வாக அலகாக இணைக்கப்பட்டன. (தொடர்ந்தும் ஒரே நிர்வாகமாக இருக்க வேண்டுமா என்பது கிழக்கு மாகாணத்தில் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற ஏற்பாடும் இருந்த போதிலும் அதற்கான வாய்ப்புகள் உருவாகவில்லை)

1988இல் அமைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கூட தாக்குப்பிடிக்காத வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாக சபை கலைக்கப்பட்டு 2006 வரை மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிலேயே இயங்கியது.

பின்னர், வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்த அப்போதைய ஜனாதிபதியின் (ஜே.ஆர். ஜயவர்தனவின்) நடவடிக்கை சட்டப்படி செல்லாது என்று 2006இல் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை அடுத்து, அடுத்த வருடமே இரண்டு மாகாணங்களும் தனித்தனி நிர்வாகங்களாக பிரிக்கப்பட்டன.

பின்னர் 2008இல் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது. 2013இல் தேர்தல் நடக்கும் வரை வடக்கு மாகாண சபையும் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிலேயே இயங்கியது.

### காணி, பொலிஸ் அதிகாரங்கள்

13ஆவது திருத்தத்தின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு கிடைக்க வேண்டிய பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் இன்னும் வழங்கப்படாமல் அந்த நிர்வாகங்கள் மத்திய அரசின் பிடியிலேயே தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ளன என்று தமிழர்கள் தரப்பில் தொடர்ச்சியாக விசனம் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

நாட்டில் வடக்கு, கிழக்கு உட்பட தற்போதுள்ள 9 மாகாண சபைகளுக்கும் ஆதாரமாகவுள்ள 13 ஆவதுதிருத்தத்தை ஒழிக்கவேண்டும் என்று இப்போது ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசின் பலதலைவர்கள் குரல் எழுப்பி வருகின்றனர்.

> “இனி, புதிய அரசமைப்பில் 13ஆவது திருத்தம் அப்படியே நீடிக்க வாய்ப்பில்லை என்றே அவதானிகள் கருதுகின்றனர்.”

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றுள்ள சரத் வீரசேகர, 13ஆவது திருத்தத்தில் உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் ஒழிக்கப்பட வேண்டும் என்று அண்மையில் கூறியிருந்தார்.

ஆனால், 13ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்த இந்திய – இலங்கை ஒப்பந்தம் வெறும் காகிதமாகி விடக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை அண்மையில் சந்தித்திருந்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தெரிவித்திருந்தார்.

அவ்வாறே, 13ஆவது திருத்தத்தை புதிய அரசு ஒழிக்கக் கூடாது என்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் கோரி வருகின்றனர்.

### ஒரே நாடு ஒரே சட்டம்

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, 13ஆவது திருத்தத்தை ஒழிப்பது என்பது வீண் வேலை. வடக்கு மற்றும் கிழக்குக்கு சமச்சீரற்ற அதிகாரப் பரவலாக்கல் அத்தியாவசியமானது என்று அண்மையில் ருவிட்டரில் தெரிவித்திருக்கிறார்.

கடந்த மைத்திரி – ரணில் தலைமையிலான ‘நல்லாட்சி’ அரசிலும், அதற்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷவின் முதல தவணை ஜனாதிபதி ஆட்சியிலும் வெளியுறவு அமைச்சராக இருந்த மங்கள சமரவீர, தற்போதைய அரசின் புதிய சட்டத் திருத்தங்கள் தொடர்பில் கடுமையான விமர்சனங்களைமுன்வைத்து வருகின்றார். (நாடாளுமன்ற அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாகக் கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் அவர் அறிவித்திருந்தார்.)

‘ஒரே நாடு – ஒரே சட்டம்’ என்ற அடிப்படையில் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என்று அரசமைப்பு திருத்தங்களை இலகுவாகக் கொண்டுவரக்கூடிய அளவுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பலத்தை வைத்திருக்கின்ற ராஜபக்ஷ அரசு உறுதியாகக் கூறுகின்றது.

இனி, புதிய அரசமைப்பில் 13ஆவது திருத்தம் அப்படியே நீடிக்க வாய்ப்பில்லை என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

அப்படியானால், சில மாறுதல்களோடாவது 13ஆவது திருத்தம் நீடிக்குமா அல்லது அப்படியே காணாமல்போய் விடுமா என்பதை அறிய இன்னும் சிறிது காலம் பொறுக்க வேண்டும்.

நன்றி:- ‘தமிழ் அவனி’

# மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களின் அதிகாரங்களை வரையறுக்குமாறு கோரிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,செப்.04

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களிற்கு உள்ள அதிகாரம், அதில் தலைவர்கள் மேற்கொள்ளக் கூடிய தீர்மானங்கள் மற்றும் கூட்டிணைந்து செயல்படும் வழி முறைகள் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் முழுமையான வழிகாட்டல் கையேடு ஒன்றை வெளியிட வேண்டும் என ஆளுநர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆளுநர்களின் கலந்துரையாடல் கடந்த 31 ஆம் திகதி கொழும்பில் மேல் மாகாண சபை அலுவலகத்தில் இடம் பெற்ற போதே மேற்படி கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன் வைக்க அக்கூட டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

இலங்கையின் பல மாவட்டங்க ளிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்க ளில் ஒருவரும் மாகாண ஆளுநரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிற்கு இணைத் தலைவர்களாக நியமிக்கப் பட்டபோதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் தனித்து செயல்படுவது தொடர்பில் அதிருப்தி தெரிவிக்கப் பட்டதோடு தனித்து தீர்மானம் எடுப்பது தொடர்பிலும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஏற்கனவே இவை தொடர்பான சுற்று நிருபங்கள் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் 2019-02-13 மற்றும் 2017-05-27 ஆம் திகதிகளில் வெளியிட்டுள்ளபோதும் அவற்றிற்கு மாறாக விடயங்கள் நடப்பதனாலேயே இவ்வாறு கோருவதென ஆளுநர்கள் தீர்மானித்துள்ளனர் எனக் கூறப்பட்டது.

# கோக்ககோலா நிறுவனமும் செஞ்சிலுவை சங்கமும் 16 ஆயிரத்து 800 பிசிஆர் கருவிகளை வழங்கின!



கொகா கோலா நிறுவனம் மற்றும் இலங்கை செஞ் சிலுவை சங்கம் ஆகியன இணைந்து 16 ஆயிரத்து 800 பீ.சீ.ஆர் பரிசோதனை கருவிகள் மற்றும் 17 ஆயிரம் வி.ரி.எம் ஆகியவற்றை பிரத மரிடம் நன்கொடையாக வழங்கும் நிகழ்வு இன்று (வியாழக்கிழமை) அலரி மாளிகையில் இடம் பெற்றது.

கொவிட் – 19 தொற்றாளர்களுக்கு சிகிச்சைய ளிக்கும் 06 வைத்தியசாலைகளுக்கு இந்த பரிசோ தனை கருவிகள் வழங்கப்படவுள்ளன. இந்த கரு விகளின் பெறுமதி ரூபாய் 50 மில்லியன் ஆகும்.

கொகா கோலா நிறுவனம், இலங்கை செஞ் சிலுவை சங்கத்துடன் இணைந்து கொவிட் – 19 தொற்றாளர்களுக்காக இதுவரை ரூபாய் 130 மில் லியனை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் பணிப்பாளர் நாயகம் மஹேற குணசேகர, கொகா கோலா நிறுவனத்தின் மக்கள் தொடர்பு பணிப்பாளர் லக்ஷ்ஜுன் மதுரசிங்க, முகாமைத்துவ பணிப்பாளர் மயன்க் அரோரா, இந்திய மற்றும் தெற்காசிய பிராந்திய முகாமைத்துவ பணிப்பாளர் பங்கஜ்சிங் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

## நாட்டின் பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக மழை பெய்யும்!

மேல், சப்ரகமுவ, தென், மத்திய மற்றும் வடமேல் மாகா ணங்களில் தொடர்ச்சியாக மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

அத்தோடு ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களி லும் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்க ளிலும் பல இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அத்திணைக்களம் சுட்டிக்காட்டியுள் ளது.

அதேநேரம் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தி லும் காற்றின் வேகமா னது அவ்வப்போது மணித் தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் வளிமண்ட லவியல் திணைக்களம் தெரிவித் துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் என்பதோடு, மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அத்தி ணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## ஊழியர் சேமலாப நிதியை எஸ்.எம்.எஸ். ஊடாக பெறலாம்

ஊழியர் சேமலாப நிதியின் தற்போதைய மிகுதியையும் அதுதொடர்பான தகவல்களை யும் தத்தமது அலைபேசிக்கு குறுந்தகவலாக மாதாந்தம் அனுப்பும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொழில் திணைக்கள ஆணையாளர் ஏ. விமலவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டையை உள்ளீர்த்து, தக வல்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் செயற் படுத்தப்பட்டு வந்த திட்டம் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியின் தற்போதைய இருப்பு தொடர்பான தகவல்களை, மாதாந் தம் தத்தமது அலைபேசிக்குக் குறுந்தகவலாக அனுப்பும் வேலைத்திட்டத்துக்கான நட வடிக்கைகள் தயார் நிலையில் இருக்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 'பி' அட்டை இல்லாத சந்தர்ப்பத் திலும் ஊழியர் சேமலாப நிதியை இதன்மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரி வித்துள்ளார்.

## புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தில் தீ விபத்தினால சிறிது நேரம் பதற்றநிலை

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் தீப்பற்றியதில் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட் டது.

நேற் பகல் புதுக்குடியிருப்பு பிரதேச செயல கத்திற்கு மின் இணைப்பு வழங்கப்படும் இடத் தில் திடீரென தீ பற்றி எரிய ஆர பித்தது.

இந்நிலையில் அங்கு இருந்தவர்கள் பதற்றமடைந்தனர். பாதுகாப்பு அதிகாரிகள் விரைந்து சென்று தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். இதனால் ஏற்பட இருந்த பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டது.



## நாட்டில் சீரற்ற காலநிலை பாதிப்பு 9 ஆயிரத்துக்கு மேல்!



நாட்டில் நிலவிவரும் சீரற்ற வானிலை காரண மாக நாடளாவிய ரீதியில் 9 ஆயிரத்துக்கும் மேற் பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விட யம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாடளாவிய ரீதியில் 12 மாவட்டங் களில், இரண்டாயிரத்து 428 குடும்பங்களை சேர்ந்த 9 ஆயிரத்து 853 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் காலி மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன்படி, காலி மாவட்டத்தில் ஆயிரத்து 671 குடும்பங்களை சேர்ந்த 7 ஆயிரத்து 166 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தங்களால் 33 வீடுகள் முழுமையாகவும், 555 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 2 இடர்தங்கல் முகாம்களில், 99 குடும்பங்களைச் சேர்ந்த 325 பேர் தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

## நீடிக்கின்றது தலைமைத்துவப் பிரச்சினை ஐ.தே.கவின் செயற்குழு இன்று கூடுகிறது

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட செயற்குழுக் கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலை மையில், கட் சித் தலைமையகமான சிறிகொத் தவில் இந்த செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்வதில் கட்சிக்குள் தொடர்ந்தும் இழுபறி நிலை காணப்படுகிறது.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாக இதன் போது அவதானம் செலுத்தப்படவுள்ளதாக கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

அதேநேரம், கட்சியின் தலை மைத்துவம் தொடர் பாக தற்போது பல்வேறு கருத்துக்கள் முன்வைக் கப்படுகின்றன.

## இருபாலை விவசாயிகள் நாளை ஒன்று கூடல்

இருபாலை, செப்.04

இருபாலை தெற்கு விவசாய சம்மேளனத்தின் காலபோக பயிர்செய்கை தொடர்பான கூட்டம் 05.09.2020 சனிக்கிழமை காலை 9 மணியவில் இருபாலை தெற்கு கிராம அபிவிருத்தி சங்க மண் டபத்தில் தலைவர் த.தர்ஷன் தலைமையில் நடை பெறவுள்ளது.

அவ்வேளை அனைத்து விவசாயசம்மேளன அங்கத்தவர் களையும் தவறாது கலந்துகொள்ளும் படி செயலாளர் ந.கஜேந்திரகுமார் கேட்டுள்ளார்.

## 3,290 பட்டதாரிகளுக்கு வடமாகாணத்தில் நியமனம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,செப்.04

நாடு முழுவதும் வழங்கப்படும் 50 ஆயிரம் பட்டதாரிகள் நியமனத்தில் வடக்கு மாகாணத்திற்கு 3 ஆயிரத்து 290 பேருக்கே அது கிடைத்துள்ளதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

வறிய குடும்பங்களைச் சேர்ந்த – கல் வியறிவு குறைந்தவர்களுக்கு – ஒரு லட்சம் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் 50 ஆயி ரம் பட்டதாரிகளிற்கான நியமனம் வழங் கப்பட்டு நேற்றுமுன்தினம் முதல் அவர் கள் கடமைகளைப் பொறுப்பேற்கின் றனர். இவ்வாறு வழங்கப்பட்ட நியம னத்தில் வடக்கின் 5 மாவட்டத்திலும் முழு மையாக 3 ஆயிரத்து 290 பேருக்கே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2 ஆயி ரத்து 78 பட்டதாரிகளிற்கும், வவுனியா மாவட்டத்தில் 383 பட்டதாரிகளிற்கும், மன்னார் மாவட்டத்தில் 329 பட்ட தாரி களிற்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 267 பட்ட தாரிகளிற்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 233 பேருக்கும் இது வழங் கப்பட்டுள்ளது.

நியமனம் வழங்கப்பட்டவர்களில் அதி கமானோர் நேற்றைய தினமே தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர் என வும் மாவட்டச் செயலகங்கள் தெரிவிக் கின்றன.

## 9 மாவட்ட மக்களுக்கு வழங்கவென அனர்த்த நிவாரண நிதி ஒதுக்கீடு!

பல பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலை தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத் தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப் பிலி இதனைத் தெரிவித்துள்ளார்.

அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ள ஒன்பது மாவட் டங்களைச் சேர்ந்த மக் களுக்கு உடனடி நிவாரணம் வழங்க மூன்று மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

இது மாவட்ட செயலாளர்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளதென உள்நாட்டு அலு வல்கள், பாதுகாப்பு, அனர்த்த முகாமைத் துவ இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் கிறிஸ்டிலால் பிரனாந்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை அனர்த்தம் சம்பந்த மாக பொது மக்கள் தகவல்களை அறி விப்பதற்கு 117 என்ற விசேட தொலை பேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

அனர்த்தம் இடம்பெறுமாயின் அது தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கு பிரதேச செயலக மட்டத்தில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என வும் பிரதீப் கொடிப்பிலி சுட்டிக்காட் டியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# 19 ஆவது திருத்தத்தை ஒழித்தால் கூட்டமைப்பு அதனை எதிர்க்கும்

## அரசை எச்சரிக்கிறார் சுமந்திரன்



யாழ்ப்பாணம், செப். 03

ஜனநாயகத்தை மேம்படுத்தவே நாம் 19 ஆவது திருத்தத்தை உருவாக்கினோம். தற்போதைய அரசு இதை இல்லாதொழிக்க முயல்கிறது. இது நாட்டுக்குக் கேடு – ஜனநாயக விரோத செயல். இதை நாங்கள் எதிர்ப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

வடமராட்சியில் தனது அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எமக்கு முன்பாக பாரிய சவால் உள்ளது. எந்த மோசமான ஆட்சியாளர்களை வீழ்த்தினோமென மார்தட்டினோமோ, அவர்கள் அதைவிட மோசமான விதத் தில், அதிக பலத்துடன் ஆட்சிக்கு வந்துள்ள னர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஒரே தேர்தலில் பெற்றுள்ளனர். யுத்த வெற்றிக்கு பின்னர் வந்த 2010 தேர்தலில் கூட, மூன்றில் இரண்டை பெறவில்லை. பின்னர் பணம் கொடுத்து பெற்றனர். எங்களது பலம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

இப்போது புதிய அரசமைப்பை உருவாக்க அரசு முயற்சிக்கிறது. அதற்கு முன்னதாக 19 ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்து, 20 ஆவது திருத்தத்தை கொண்டு வர முயற்சிக்கிறார்கள். மிக விரைவாக அதை செய்கிறார்கள். சட்டமா அதிபருக்கு வரைவைச் சென்ற வாரமே அனுப்பி விட்டனர். சட்டமா அதிபர், சர்வஜன வாக்கெடுப்பின்றி நிறைவேற்றக்கூடியது எனத் தனது கருத்தைச் சொல்லியுள்ளார்.

2015ஆம் ஆண்டில் நாங்கள் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி, 19 ஆவது திருத்தத்தைக் கொண்டு வர நான்கைந்து மாதங்களுக்கு மேல் சென்றது. அது 18 ஆவது திருத்தத்தை அகற்றி, 17ஆவது திருத்தத்தை கொண்டு வருவதுதான். ஆனால் நான்கைந்து மாதங்கள் எடுத்தது. இவர்களுக்கு நான்கைந்து வாரங்கள் கூடத் தேவையில்லை. சிலருக்கு சரியானதைச் செய்வதற்கு பயம். இவர்களுக்கோ பிழையானதை செய்யவும் பயமே கிடையாது. அப்படியான அரசையே எதிர்கொள்கிறோம்.

19 ஆவது திருத்தத்தை அகற்றுவது, நாட்டை மோசமான ஜனநாயக விரோத பாதையிலே கொண்டு செல்லும் வழி. இதை நாங்கள் திரும்பத் திரும்ப அரசுக்கு சொல்கிறோம். ஜனநாயகத்தை மேம்படுத்த, இந்த நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக, நல்லாட்சி தத்துவங்களை உள்ளடக்கியதாக அரைவாசித் தூரம் செல்வதற்கென கொண்டுவரப்பட்ட 19 ஆவது திருத்தம். அது முழுத் தூரமும் சென்றிருந்தால் நாங்கள் இயற்றிய அரசமைப்பு அமுலுக்கு வந்திருக்கும். அதற்கு முன்னர் எல்லாம் கவிழ்ந்து கொட்டுப்பட்டு, இருக்கின்ற அந்த அரை வாசித்தூரம் சென்றதையும் இல்லா தொழிக்கும் பணியை அரசு முன்னெடுத் துள்ளது.

இது நாட்டுக்கு கேடு. ஜனநாயக விரோதச் செயல். இதை நாங்கள் எதிர்ப்போம் என்பதை அரசுக்குச் சொல்லி வைக்க விரும்புகிறோம். ஜனநாயக விரோதச் செயல்களில் ஈடுபட்ட எந்த அரசும் நிலைத்து நின்றதில்லை.

தேர்தலின் பின்னர் ஜனாதிபதி உரை யாற்றியபோது, முதலில் 19ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாகவும், பின்னர் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவ தாகவும் சொன்னார். இந்த நாட்டுக்குத் தேவையானது புதிய அரசமைப்பு. ஒரு நாட்டின் அரசமைப்பு என்பது வெறும் சட்டமல்ல. அந்த நாட்டு மக்கள் தமக்குள் செய்து கொள்ளும் உடன்பாடு. அதை சமூக ஒப்பந்தம் என்பார்கள்.

இந்த நாடு எதிர்கொண்ட மிகப் பெரிய பிரச்சினை அப்படியான சமூக ஒப்பந்தம் இல்லாமை. அது பேரினவாத சிந்தனையினால், பெரும்பான்மை ஆட்சியினால், கூடுதலான மக்கள் ஒரு பக் கம் இருக்கின்ற காரணத்தினால் – அந்த வாக்கு பலத்தினால் தமக்கு தேவையான விதத்தில் அரசமைப்பை உருவாக்கியதால் வந்த பிரச்சினை.

எண்ணிக்கையில் சிறுபான்மையாக உள்ள ஒரே காரணத்தினால், தாம் இந்த நாட்டின் சம பிரஜைகள் என்பதை நிரூ பிக்க முடியாமல் தமது இறைமையை விட்டுக் கொடுக்க வேண்டியதாக மற்றைய மக்கள் இருக்கும் துர்ப்பாக்கியமான நிலை மையின் காரணமாகவே இத்தனை இலட்சம் மக்கள் தமது உயிர்களைப் பலி கொடுத்தனர். பல தசாப்தங்களாக நாடு முழுவதும் போர்க்களமாக இருந்தது. அதைச்சரிசெய்யவேண்டுமென்றால், நாட் டுக்கு புதிய அரசமைப்பு தேவை.

அது ஓர் இனத்துக்கான அரசமைப்பாக இருக்க முடியாது. அனைத்து மக்களும் இணங்கும் சமூக ஒப்பந்தமாக அரச மைப்பு இருக்க வேண்டும். அதைத்தான் இந்த அரசு செய்யவேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நாட்டில் வாழும் அனைத்து மக்களின் நன்மைக் காக உபயோகிக்க வேண்டிய ஒரு தார் மீகக் கடப்பாடு அரசுக்குள்ளது. அதை அவர்கள் செய்ய வேண்டுமென்ற சவாலை நாம் அரசின் முன் வைக்கிறோம்.

அந்த துணிவு அவர்களுக்கு வேண்டும். அதை செய்ய துணிவார்களாக இருந்தால் எமது ஆதரவு நிச்சயம் அந்த செயலுக்கு இருக்கும். தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவுடன் அதை செய்து முடித்தால், நாட்டுக்கு தேவையான சமூக ஒப்பந்தமாக மிளிரும் – அதை செய்தால் நாடு சுபீட்சமடையும். இல்லையெனில் நாடு திரும்பவும் அதலபாதாளத்தில் தள்ளப்படும் – என்றார்.

# விக்கிக்கு எதிராக நேற்று பொலிஸில் முறைப்பாடு!

## கடவுச்சீட்டை பறிமுதல் செய்யக் கோரிக்கை

கொழும்பு, செப்ரெம்பர் 03

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வீ.விக்னேஸ்வரன் மீது சட்டநடவடிக்கை எடுக்க வேண்டுமென சட்டத்தரணி தர்சன வெரதுவேஜ் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

சமூகங்களிடையே இன அல்லது மத வெறுப்பைத் தூண்டும் வகையில் ஊடகங் களுக்கு அறிக்கைகளை வழங்கியமைக்காகவே அவர் விக்னேஸ்வரன் மீது முறைப்பாடு செய்துள்ளார்.

ஓகஸ்ட் 30 அன்று இரண்டு தனியார் தொலைக் காட்சிகள் ஒளிபரப்பிய நிகழ்ச்சிகளின் மூலம் விக்னேஸ்வரன் மோசமான கருத்துக்களை வெளியிட்டாரென தர்ஷன வெரது வேஜ் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல என்று விக்னேஸ்வரன் கூறினார் என அந்த முறைப்பாட்டில் அவர் தெரிவித்துள்ளார்.

ஓய்வுபெற்றநீதியரசரான விக்னேஸ்வரன் இலங்கை இராணுவத்துக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார் என்றும், வடக்கு மாகாணத்தில் புத்தர் சிலைகள் தன்னிச்சையாக நிறுவப்படுவதாகக் கூறி அறிக்கை வெளியிட்டார் என்றும் அந்த முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை (ஐ.சி.சி.பி.ஆர்) சட்டம் எண் 3 (1) இன் கீழ், 2007 இன் 56, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 2 (1) (எச்) மற்றும் தண்டனைச் சட்டத்தின் 120 மற்றும் 290 (பி) பிரிவுகளின் கீழ் விக்னேஸ்வரன் தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்தார் என சட்டத்தரணி தர்சன வெரதுவேஜ் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

விக்னேஸ்வரனுக்கு எதிராக உடனடியாக விசாரணையைத் தொடங்கவும், அவரது கடவுச்சீட்டைப் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அவர் தனது முறைப்பாட்டில் கோரியுள்ளார்.

# புதிய கூட்டணியில் தலைமைத்துவ சபை?

கொழும்பு, செப் 03

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசதலைமையில் 'ஐக்கிய மக்கள் கூட்டணி' எனும் பெயரில் புதியதொரு அரசியல் கூட்டணி இன்னும் இரு வாரங்களில் உதயமாகவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம் பெற்று வருவதாகவும் புதிய சில கட்சிகளும், அமைப்புக்களும் கூட்டணியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன எனவும் தெரிய வருகின்றது.

இந்தக் கூட்டணிக்குத்தலைமைத்துவச்சபையொன்று உருவாக்கப்பட்டு அதன் தலைவராக சஜித் பிரேமதாஸவும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் தலைமைத்துவ சபை உறுப்பினர்களாகவும் செயற்படவுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

அத்துடன் புதிய கூட்டணியை பதிவு செய்யும் நடவடிக்கையும் இடம்பெறவுள்ளது.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய உட்பட மேலும் சில கட் சிகள் கூட்டணி வைத்துள்ளன. இவை புதிய கூட்டணிக்கு உத்தியோகபூர்வமாக உள்வாங்கப்படவுள்ளன.

# வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலர்கள் பலருக்கு இடமாற்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்.03

வடக்கு மாகாண அமைச்சுக் களின் செயலாளர் பலரிற்கு இன்றைய தினம் முதல் அதிரடி மாற்றங்கள் வடக்கு மாகாண ஆளுநரினால் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வழங்கப்பட்ட இடமாற்றங்களில் தற்போதைய ஆளுநர் செயலக செயலாளர் எஸ். சத்தியசீலன் கொழும்பு அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டுள்ளார். அவரது இடத்திற்கு தற்போதைய உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரான திருமதி சரஸ்வதி மோகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனால் ஏற்படும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வெற்றிடத்திற்கு தற்போதைய மகளிர் விவகார அமைச்சின்

செயலாளரான வரதீஸ்வரன் நியமிக்கப் பட்டுள்ளார்.மகளிர் விவகார அமைச்சின் செயலாளராக தற்போதைய பேரவைச் செயலக செயலாளரான ரூபினி வரதலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளதோடு பேரவைச் செயலகத்திற்கும் பதில் கடமையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஹெரோயின் நுகர்ந்தனரென ஐவர் கொக்குவிலில் சிக்கினர்

யாழ்ப்பாணம்,செப். 03

கொக்குவில் கிழக்குப் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் நுகர்ந்து கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஐந்து சந்தேக நபர்கள் பொலிஸாரால் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொக்குவில் கிழக்குப் பகுதியில் உள்ள ஆலய வளாகத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் இளைஞர்கள் கூடி நிற்பதாக கோப்பாய் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதன் அடிப்படையில்பொலிஸார்மேற்கொண்ட விசாரணையில் 5 சந்தேகநபர்களைக் கைது செய் தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 210 மில்லிக் கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

# சுமந்திரனுக்கு எதிராக தமிரசுக் கட்சுக்குள்ளே தேர்தல் சமயம் கட்டவிழ்ந்த சதிச் செயற்பாடுகள்

## அவரே மத்திய குழுவில் விவரமாகப் பட்டியலிட்டார்

**நடந்து முடிந்த தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கு ஏற்பட்ட பின்னடைவு குறித்து அக் கட்சியின் மத்திய குழு கடந்த சனிக்கிழமையன்று வவுனியாவில் கூடி ஆராய்ந்தது. அக்கூட்டத்தில் வைத்து தேர்தல் சமயத்தில் வேட்பாளர்களான தனக்கும்,சிறீதரனுக்கும் கட்சிக்குள் இழைக் கப்பட்ட துரோக நடவடிக்கைகள் குறித்துத் தமிழரசு எம்.பியான எம்.ஏ.சுமந்திரன் நீண்ட பட்டோலை வாசித்தார். எழுதித் தயாரித்து எடுத்து வந்த அந்தக் குற்றசாட்டுப் பத்திரத்தின் பிரதிகளை அவர் அக்கூட்டத்தில் பங்குபற்றியோருக்கும் விநியோகித்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு.கி. துரைராஜ சிங்கத்துக்கு முகவரியிடப்பட்ட கடித வடிவத்தில் அது இருந்தது. அதன் பிரதி ஒன்று எமக்குக் கிட்டியமையால் அதனை மக்கள் அறிவதற்குப் பிரசுரிக்கலாம் என்று கருதினோம். அதன் முதல் பகுதி இன்று பிரசுரமாகின்றது.**
**மிகுதிப் பகுதி நாளை பிரசுரமாகும்.**

கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் 2012 இல் நாம் சார்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் பாரிய பின்னடைவைச் சந்தித்திருக்கிறோம். அதாவது எமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 ஆசனங்களில் இருந்து 10 ஆசனங்களுக்குக் குறைக் கப்பட்ட போது தோல்வியடைந்த வேட்பாளர்களுள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், பொதுச் செயலாளரும் அடங்குகின்றனர். இப்படியாக கட்சியின் தலைவரும் பொதுச்செயலாளரும் பின்னடைவை சந்தித்தமையானது கட்சி தோல்வியடைந்த தாகக் கருதப்படக்கூடியதொரு துப்பாக்கிய நிலையைத் தோற்றுவித்துள்ளது.

இத் தோல்விக்கான காரணங்கள் பல. அவற்றில் சில வெளிக்காரணிகள். அவற்றை ஆராய்வதற்கு முன்னதாக உள்காரணிகளை நாங்கள் அடையாளம் காண வேண்டும். தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்குள்ளும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் காணப்பட்ட உள்ளக முரண்பாடுகளும், எமது கட்சி வேட்பாளர்களே சகவேட்பாளர்களுக்கு எதிராக விசேடமாக எனக்கெதிராக வெளிப்படையாகச்செய்த பிரச்சாரமும் பின்னடைவிற்கு முக்கிய காரணிகள் என்பது எனது நிலைப்பாடு.

இந்தச் செயல்களிலே ஈடுபட்ட கட்சி உறுப்பினர்கள் உடனடியாகக் கட்சியிலிருந்து நீக்கப்பட வேண்டும். ஏனென்றால் முக்கியமான தேர்தலொன்றில் தமது சொந்தக்கட்சி வேட்பாளர்களுக்கு எதிராக அதே கட்சி உறுப்பினர்களே பிரச்சாரம் செய்வதை எக்காலத்திலும் தேர்தல் அரசியலில் ஈடுபடுகின்ற ஓர் அரசியல் கட்சி அனுமதிக்க முடியாது.

கடந்த ஓகஸ்ட் 2013 பொதுத் தேர்தலில் திரு. சி.வீ.விக்கினேஸ்வரன் எமது கட்சிக்கெதிராக எடுத்த நிலைப்பாடு காரணமாக அவரை உடனடியாகக் கட்சியிலிருந்து நீக்க வேண்டுமென்று எமது மத்திய செயற்குழுவில் நான் கோரிக்கை விடுத்தமை அனைவருக்கும் ஞாபகமிருக்கும். அதை அப்பொழுதே செய்யாததன் விளைவு இன்று வரை கட்சியை மிக மோசமாகப் பாதித்திருக்கிறது. அந்தத் தவறை மீண்டும் மீண்டும் இழைக்கக் கூடாதென்பதே எனது நிலைப்பாடு.

இவ்வருட ஆரம்பத்தில் எமது அரசியல் குழு திருகோணமலையில் கூடி எதிர்கொள்ளவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் 2020 ஐக் குறித்து ஆராய்ந்த போது ஏகமனதாக முக்கியமான முடிவொன்றை எடுத்து பகிரங்கமாக அறிவித்திருந்தோம். திரு. சம்பந்தன் பத்திரிகைகளுக்குச் சொன்னதன் பிரகாரம் ‘இந்தத் தடவை நாங்கள் வேட்பாளர்களாக படித்த, ஆற்றலுள்ள இளைஞர்களுக்கே முன்னுரிமை கொடுப்போம்’ என்பதே அந்த முடிவு.

இதை நடைமுறைப்படுத்துவதாக இருந்தால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தார்கள் என்ற காரணத்துக்காக இயல்பாகவே வேட்பாளர் நியமனம் கொடுக்கக்கப்படக்கூடாதென்றும், நாங்களும் மற்றவர்களுடன் சேர்ந்து விண்ணப்பித்து பொருத்தமானவர்களுக்கு நியமனம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் பல தடவைகளில் நான் வலியுறுத்தியிருந்தேன். இதற்கமைவாக கட்சியினால் புதிதாக விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டிய தேவைப்பாடு இருந்த போதிலும் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்பதுடன் ஒரேயொரு தடவைதான் வேட்பாளர் நியமனக் குழு கூடியது. அங்கும் இதேகருத்தை நான் ஆணித்தரமாக முன்வைத்திருந்தேன். ஆனால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதன் விளைவை இந்தத் தேர்தல் முடிவுகளில் அப்பட்டமாகக் காணலாம். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பாகப் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் தோற்றிருக்கிறார்கள். நால்வரே வெற்றி பெற்றிருக்கிறோம்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினா திரு. ஈஸ்வரபாதம் சரவணபவனுக்கு நியமனம் கொடுக்கக் கூடாதென்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவருக்குத் தனியாகக் கூறியிருந்தேன். திரும்பவும் ஒரு தடவை கட்சி அலுவலகத்தில் வைத்து இதே கருத்தை அவருக்கு கூறியிருந்தேன். குறித்த விடயம் இணையத்தளங்களில் வெளியாகி பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் நியமனக் குழுக் கூட்டத்தில் திரு. சரவணபவனின் முன்னிலையிலும் குறிப்பிட்ட விடயத்தைக் கூறியிருந்தேன். அதற்கான நியாயமான காரணங்கள் பல இருந்தன. அப்படியிருந்தும் அவருக்கு நியமனம் வழங்கப்பட்டது. ஆனால் மக்கள் அவரைத் தேர்தலில் தோற்கடித்திருக்கிறார்கள். அவர் தோல்வியடைந்தற்கு மேலாக கட்சியின் தோல்விக்கு அவருடைய செயற்பாடுகள் மிகவும் முக்கிய காரணியாக அமைந்திருந்தன.

அதேபோல் குறிப்பிட்ட ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரால் புரியப்பட்டதாக கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் கிடைக்கப்பெற்ற திடமான சில ஆதாரங்களை கட்சித்தலைமைக்குச் சேர்ப்பித்திருந்த போதிலும் அதுதொடர்பில் எதுவித விசாரணைகளுமின்றி குறிப்பிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. அவரும் இத்தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்டுள்ளார்.



நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்த பின்னர் கூட, தேர்தல்காலத்திலே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றைய சில வேட்பாளர்களும் எனக்கு எதிராகப் பகிரங்கமாக பல அறிக்கைகளை வெளியிட்டிருந்தார்கள்.

நான் மே மாதத்தில் ஊடகமொன்றுக்கு சிங்கள மொழியில் கொடுத்த பேட்டியை அரசாங்கக் கட்சியின் ஊடகமொன்று தேர்தல் உள்நோக்கங்களோடு திரிபுபடுத்தி வெளியிட்ட போது அதைப் பற்றி என்னிடம் தனிப்பட எந்த விளக்கத்தையும் கோராது, சரியான மொழி பெயர்ப்பைக்கூட அறியாது, தன்னிச்சையாக எமது கட்சியின் பலவேட்பாளர்கள் விருப்பு வாக்கு நோக்கங்களுக்காக எதிர்ப்பு அறிக்கைகளை வெளியிட்டார்கள். அப்படிக் கண்டன அறிக்கைகள் வெளியிடாதிருந்த சிலரிடம் திரு. சரவணபவன் தொடர்ச்சியாகத் தொலைபேசியில் அழைப்பெடுத்து அவர்களும் கண்டன அறிக்கைகளை வெளியிட வேண்டுமென வற்புறுத்தியிருந்தார். குறித்த செவ்வியைப் பற்றிய சரியான விளக்கத்தை நான் கொடுத்த பின்பும் கூட மீண்டும் மீண்டும் தேர்தல் காலத்தில் இந்த விடயத்தை பேசுபொருளாக்கி ஊதிப் பெருப்பித்திருந்தார்கள். தேர்தல் பிரச்சாரக் காலத்தில் நான் பேசிய கூட்டங்களில் இந்த விடயம் குறித்த தெளிவூட்டலை மக்களுக்கு வழங்கியிருந்தேன். என்னை இந்த விடயத்தில் கடுமையாக விமர்சித்தவர்கள் இப்போது தோற்றிருக்கிறார்கள். நான் வென்றிருக்கிறேன்.

குறிப்பாக திரு. சரவணபவன் நான் கட்சிப் பொறுப்புக்களிலிருந்து தூக்கி எறியப்பட வேண்டுமெனக் கூறியிருந்ததோடு, ’உதயன்’ பத்திரிகை தொடர்ச்சியாக எனக்கெதிரான பிரச்சாரத்தை முன்னெடுத்திருந்தது.

இச்செவ்வி சம்பந்தமாக திரு. சம்பந்தன் வெளியிட்ட அறிக்கையையும் மாற்றி திரிபுபடுத்தி வெளியிட்டிருந்தது. ஒரு முறை பத்திரிகைத் தலைப்பாக ’தமிழ்த் தேசியத்தைக் காக்க சுமந்திரனைத் தோற்கடிப்போம்’ என்றும், இன்னொரு தடவை முதற் பக்கத்தில் கட்டமிடப்பட்ட செய்தியாக சுமந்திரனுக்கு அமைச்சுப் பதவி ஆசை என்றும் பிரசுரித்திருந்தது.

திரு. சரவணபவனைப் போலவே வேறு சில வேட்பாளர்களும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களும் ‘சுமந்திரனுக்கு வாக்களிக்க வேண்டாம், நீங்கள் கட்சிக்கும் மற்றைய வேட்பாளர்களுக்கும் வாக்களியுங்கள்’ என பல சந்தர்ப்பங்களில் கூறியதற்கான ஆதாரங்கள் என்னிடமுள்ளன. இவையெல்லாவற்றையும் நான் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கும் அவ்வப்போதே தெரியப்படுத்தியிருந்தேன்.

திரு. சிவஞானம் சிறிதரன் எனக்கெதிராக அறிக்கை வெளியிடாததன் காரணமாகவும், எனக்கு சார்பாக சில கருத்துக்களைச் சொன்னதன் காரணமாகவும்கட்சிமுக்கியஸ்தர்களும் வேறு பலரும் அவருக்கு எதிராகவும் பிரச்சாரம் செய்தார்கள். நாங்கள் இருவரும் தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதே கட்சிக்குள்ளிருந்தும் வெளியேயிருந்தும் யாழ் தேர்தல் மாவட்டத்தில்செய்யப்பட்டமிகப்பெரும்பிரச்சாரம். தேர்தலை அண்மித்த நாட்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களிக்குமாறும், ஆனால் அதில் எங்கள் இருவரையும் தோற்கடிக்குமாறும் இலட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இறுதியில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் திரு. சிறிதரனும் நானும் மாத்திரமே வெற்றி பெற்றிருக்கிறோம். எமக்கெதிரான பிரச்சாரத்தை நடத்தியவர்களும் நடாத்த கண்டுகொள்ளாதவர்களும் மக்களால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எமது கட்சி உறுப்பினர்களான திரு. க. குணாளன், திரு. செல்வராசா பிரதாப் மற்றும் பிற்றர் இளஞ்செழியன் போன்றவர்கள் வெளிப்படையாகவே திரு. சிறிதரனுக்கும் எனக்கும் எதிராகப் பிரச்சாரம் செய்தார்கள். இவர்களைத் தவிர இங்கு பெயர் குறிப்பிடப்படாத கட்சியின் சிரேஷ்ட நிலையிலுள்ளவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிலரும் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் என் கைவசமுள்ளது.

திரு. சிறிதரனுக்கு எதிரான திரு. குணாளனுடைய செயற்பாடுகள் தேர்தல் காலத்திற்கு முன்னதாகவே இடம்பெற்று வந்துள்ளன. திரு. சிறிதரன் இதைக் குறித்து பல தடவைகள் முறைப்பாடுகளைச் செய்தும் இது வரை திரு. குணாளனுக்கோ, மற்றையவர்களுக்கு எதிராகவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதைப் போலவே திரு. சரவணபவனுக்கு எதிராக வைத்தியர் சத்தியலிங்கம் சில வருடங்களுக்கு முன்னர் கொடுத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிள்ளையான் 5 மணிநேரம் வாக்குமூலம்



கொழும்பு, செப். 04

2019 ஏப்ரல் 21ஆம் திகதியன்று நாட்டில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டு தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் நேற்று முன்னிலையாகியிருந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) 5 மணி நேரம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து பலத்த பாதுகாப்புடன் கொழும்புக்கு நேற்றுமுன்தினம் மாலை அழைத்து வரப்பட்டிருந்த பிள்ளையான் நேற்று காலை 9.45 மணியளவில் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தார்.

அவர் அங்கு சுமார் 5 மணி நேரம் வாக்குமூலத்தை வழங்கிய பின்னர் ஜனாதிபதி ஆணைக்குழுவில் இருந்து வெளியேறியுள்ளார்.

அடுத்த வார நாடாளுமன்ற அமர்வுகளிலும் பிள்ளையான் பங்கேற்கவுள்ளதை அடுத்து நாடாளுமன்ற அமர்வுகள் நிறைவடைந்த பின்னர் எதிர்வரும் 12 ஆம் திகதி மீண்டும் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அவர் அழைத்துச் செல்லப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுவரை வெலிக்கடை சிறைச்சாலையின் வைத்தியசாலையில் பிள்ளையான் தங்கவைக்கப்படுவார் என்று மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சு.கவை மைத்திரியே அழித்தார்!

## சந்திரிகா குற்றச்சாட்டு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மைத்திரிபால சிறிசேனவே முற்றாக அழித்தார் என்று முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

எனது தந்தையால் உருவாக்கப்பட்டு தாயாரால் வலுப்படுத்தப்பட்ட சுதந்திரக் கட்சியின் தற்போதைய நிலையைப் பார்த்து மிகவும் கவலையடைகின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், சந்திரிகா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிலவேளைகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைக்கு நானும் காரணம் என நான் நினைப்பதுண்டு. நான் செய்த விடயங்களால் கட்சிக்கு பாதிப்பு ஏற்படவில்லை செய்யாத விடயங்களால்தான் பாதிப்பு ஏற்பட்டது.

தொடர்ச்சியாகத் தேர்தல்களில் தோல்வியடைந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நான் வலுப்படுத்தினேன். நாங்கள் நாட்டை ஆட்சி செய்த காரணத்தினாலேயே சுதந்திரக் கட்சியினால் 23 வருடங்கள் தொடர்ந்து ஆட்சி புரிய முடிந்தது.

பலரின் வேண்டுகோள்கள் காரணமாக நான் மீண்டும் 2015 இல் அரசியலில் ஆர்வம் காட்டினேன். நாட்டினதும் சுதந்திரக் கட்சியினதும் அழிவைக் காப்பாற்ற முடியும் என நினைத்தே அவ்வாறு செய்தேன்.

பலர் நான் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ளேன் என குற்றம்சாட்டினார்கள். தலைமைப் பதவிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முற்றாக அழித்தார் – என்றார்.

# விபத்தில் படுகாயமுற்றவர் சிகிச்சை பலனின்றி சாவு

மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த நபரொருவர் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் மரணமடைந்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓட்டமாவடி எம்.பீ.சீ.எஸ்.வீதியில் வைத்தே இவ் விபத்துச் சம்பவம் கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த மாவடிச்சேனையைச் சேர்ந்த சீனி முகம்மது என்பவர் மீது அவ்வீதியால் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இரு இளைஞர்கள் மோதியதில் பலத்த காயங்களுடன் குறித்த நபர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

விபத்தில் சிக்கிய நபர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மரண மடைந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கிழக்குக் கடற்பிராந்தியத்தில் எண்ணெய்க் கப்பல் தீப்பிடிப்பு

## மாலுமி உள்ளிட்ட பணியாளர்கள் மீட்பு

அம்பாறை, செப். 04

அம்பாறை, சங்கமன்கண்டி கடற்பிராந்தியத்தில் MT New Diamon- எனும் எண்ணெய்க் கப்பல் நேற்றுக் காலை தீ விபத்துக்குள்ளாகியுள்ளது.

சங்கமன்கண்டியிலிருந்து சுமார் 40 கடல் மைல் தொலைவில் இந்தக் கப்பல் தீ விபத்துக்குள்ளாகியுள்ளது.

குவைத்திலிருந்து இந்தியாவுக்கு எண்ணெய் ஏற்றிக்கொண்டு சென்ற பனாமாவுக்குச் சொந்தமான இந்தக் கப்பலில் தீ விபத்து ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் மீட்புப் பணிகளுக்காக இலங்கைக் கடற்படையினரால் 3 கப்பல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. திருகோணமலையிலிருந்து 2 கப்பல்களும், அம்பாந்தோட்டையிலிருந்து ஒரு கப்பலும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று கடற்படையின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பலின் மாலுமி உள்ளிட்ட கப்பல் பணியாளர்கள், இலங்கைக் கடற்படையின் மற்றுமொரு கப்பலுக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனவும், உதவிக்கு விமானப்படையும் அழைக்கப்பட்டுள்ளது எனவும் கடற்படையின் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# யாழ் நகரில் கஞ்சாவுடன் இளைஞன் கைது



யாழ்ப்பாணம், செப். 04

யாழ். நகர்ப் பகுதியில் 248 கிராம் கஞ்சாவுடன் 46 வயதுடைய குருநகரைச் சேர்ந்த நபர் யாழ். மதுவரித்திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அந்த நபர் யாழ். நகரப் பகுதியில் விற்பனைக்கு தயாராக தனது மோட்டார் சைக்கிளில் கஞ்சாவை மறைத்து வைத்திருந்த வேளையில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்ய பட்ட நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண மதுவரி உதவி ஆணையாளர் பிரபாத் ஜெயவிக்கிரமவின் வழிநடத்தலின் கீழ் யாழ்ப்பாண மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ரகுநாதன் தலைமையிலான அணியினரால் இந்தக் கைது சம்பவம் மேற்கொள்ளப்பட்டது.

# கொரோனாவை வென்றமைக்கு இலங்கைக்கு நோர்வே பாராட்டு!

கொவிட் 19 சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்த நாடுகளில் இலங்கை முன்னணியில் இருப்பதாகவும் அந்த சவால் களை வெற்றிகொள்ள அரசாங்கம் மேற் கொண்ட நடவடிக்கைகளைப் பாராட்டுவதாகவும் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ட்ரீன யுரன்லி எஸ்கேடல் தெரிவித்தார்.

நேற்று (வியாழக்கிழமை) முற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நாடாளுமன்றத்தில் சந்தித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

இலங்கையில் கொவிட் 19 பாதிப்பை குறைத்துள்ளதால் தனக்கும் முகக் கவசம் இன்றி செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இதுவரை 140 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகள் நோர்வேயிடமிருந்து இலங்கைக்கு கிடைத்துள்ளதாகவும், தொடர்ந்தும் இந் நாட்டுக்கு முதலீடுகளை வழங்குவதற்கு நோர்வே தயாராகவுள்ளதாகவும் தூதுவர் மேலும் தெரிவித்தார்.



அதேபோன்று இலங்கையின் கணினி தொழில்நுட்ப வல்லுநர்கள் பலர் தமது சேவைகளை நோர்வே நாட்டு நிறுவனங்களுக்கு வழங்கி வருகின்றனர் எனத் தெரிவித்த அவர், எதிர்காலத்தில் இந்த நிலைமை மேலும் விருத்தியடையும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க மற்றும் நோர்வே தூதரக பிரதி தலைமை அதிகாரி ஹில்டே பேர்க் – ஹன்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 72 மணித்தியாலத்தில் இலங்கையில் 89 கொரோனாத் தொற்றாளர்கள்!

## இராணுவத் தளபதி தகவல்



இலங்கையில் கடந்த 72 மணி நேரத்தில் 89 புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்களில் ஆயிரத்து 197 பேர் வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு வருகை தந்தவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதில் 42 பேர் வெளிநாட்டினர் என்பதுடன், ஆயிரத்து 155 பேர் இலங்கையர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்களைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்குமாறும் அவர் பொது மக்களிடம் கேட் டுக்கொண்டுள்ளார்.

மேலும் பாடசாலை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளதால், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் சுகாதார உத்தரவுகளை கடைபிடிப்பதன் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு கற்பிப்பது அவசியமாகும் என்றும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா வலியுறுத்தியுள்ளார்.

# பொலிஸ் திணைக்கள 154 ஆண்டு நிறைவு கல்முனையில் இடம்பெற்றது சிரமதானம்!



இலங்கை பொலிஸ் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 154 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாய்ந்தமருது பகுதியில் கடற்கரை பகுதியை சுத்தப்படுத்தும் முகமாக சிரமதான நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்திற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரத்னாயக்கவின் கட்டளையின் பிரகாரம் கல்முனை பிராந்தியத்துக்கான பொலிஸ் அத்தியட்சகர் புத்திக ஜெயசுந்தரவின் வழிகாட்டலில் கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுஜித் பிரியந்த தலைமையில் கல்முனை பொலிஸ் நிலையத்தின் சமூக பொலிஸ் பிரிவின் பொறுப்பாளர் பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ எல்.ஏ.வாஹிட்டின் நெறிப்படுத்தலில் சாய்ந் தமருது பிரதேச செயலகம் மற்றும் கல்முனை மாநகரசபையும், சாய்ந்தமருது ஏ வலய திண்ம கழிவு பிரிவும் இணைந்து சாய்ந்தமருது கடற்கரை சுற்றுப்புற பகுதிகளில் சிரமதானம் முன்னெ டுக்கப்பட்டது.

இதன்போது கடலோர சுற்றுச்சூழலில் உள்ள குப்பை கூளங்கள் என்பன அகற்றப்பட்டு கடற்கரை சூழல் சுத்தப்படுத்தப்பட்டது.

இதில் கல்முனை பொலிஸ் நிலைய அதிகாரிகள், பொது மக்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள், இளைஞர்கள் கலந்து கொண்டு சிரமதானப் பணியை முன்னெடுத்தனர். குறிப்பாக சுற்றுச்சூழல் பகுதிகளில் டெங்கு நுளம்பு பரவுகை கட்டுப்படுத்தும் முகமாக குறித்த சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சுமந்திரனுக்கு எதிராக....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்சொன்னவர்களைப் போலவே திரு. கே. வி. தவராசா அவர்களும் தேர்தல் காலத்திலே எனக்கு எதிராக கடும் பிரச்சாரமொன்றை பகிரங்கமாக மேற்கொண்டிருந்தார். தேசியப் பட்டியலிலே அவருடைய பெயர் முதற்பெயராக எழுதப்படாததை காரணங்காட்டி அவர் சார்பில் திரு. குணாளனும் வேறு சிலரும் எனக்கு எதிராக தொடர்ச்சியாக பிரச்சாரம் செய்தார்கள். திரு. தவராசா அவர்களும் என்னைப் பற்றிய பல பொய்யான தகவல்களையும் வழங்கி குறைந்தது ஏழு தடவைகளாவது அறிக்கைகளும் செவ்விகளும் வெளியிட்டிருக்கிறார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் வேட்பாளர்களும் கூட இப்படியான கருத்துக்களை தேர்தல் காலத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். இதிலே திரு. செல்வம் அடைக்கலநாதன் முதன்மையானவர். யாழ்பாண தேர்தல் மாவட்டத்து வேட்பாளர்கள் திரு. சித்தார்த்தனும் திரு. கஜதீபனும் சேர்ந்து வெளியிட்ட துண்டு பிரசுரங்களில் என்னையும் திரு. சிறிதரனையும் குறிவைத்துத் தாக்கியிருந்தனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ் மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் என்று தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபனும், திருமதி. மிதிலைச்செல்வி ஸ்ரீபத்மநாதனும் நியமனப் பத்திரம் பூர்த்தி செய்த நாளிலிருந்து கட்சிக்கெதிராக ஆர்ப்பாட்டங்களும் எனக்கெதிராக பொய்ப் பிரச்சாரங்களும் செய்துவந்துள்ளனர். இதன் உச்சகட்டமாக மேற்படி விமலேஸ்வரி என்பவர் பத்திரிகை மாநாடொன்று நடத்தி கனடாவிலிருந்து பெண்கள் வாழ்வாதாரத்திற்கென்று அனுப்பப்பட்ட 212 கோடி ரூபாவை நான் கையாடிவிட்டேன் எனக் குற்றம் சாட்டினார். இது குறித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் மத்திய செயற்குழுவில் கேள்வியெழுப்பப்பட்ட தாகவும் பொருளாளர் திரு. பொ. கனகசபாபதி அப்பணம் கட்சிக் கணக்கிற்கு வரவில்லை யென்று சொன்னார் எனவும் அப்பணத்தை நான் பெற்றுக்கொண்டேன் என்பதை ஒப்புக்கொண்டேன் என்வும் பொய்யாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். இதைப் பற்றி வட்டக்கட்சியில் நடந்த பொதுக்கூட்டத்தில் வைத்து கட்சித் தலைவருக்கு கூறியிருந்தேன். தலைவர் அவர்கள் இரண்டு நாள்களுக்குள் உடனடி நடவடிக்கை எடுத்து விமலேஸ்வரியை அனைத்து பதவிகளிலிருந்தும் நீக்குமாறும் கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்துமாறும் எழுத்து மூலமாகப் பகிரங்கமாக பொதுச் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியமையயடுத்து பொதுச் செயலாளரினால் அவர் கட்சியிலிருந்து உடனடியாக இடைநிறுத்தப்பட்டார். நானும் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுத்து ஆயிரம் கோடி ரூபா கோரி வழக்குத்தாக்கல் செய்வதற்கான முன்நடவடிக்கைகளை எடுத்திருக்கிறேன். இந்த விடயத்தில் கட்சித் தலைமை உடனடி நடவடிக்கையெடுத்ததையிட்டு நன்றி தெரிவிக்கும் அதே வேளையில் நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் இது குறித்து நான் வேறெதுவும் இப்போது சொல்ல விரும்பவில்லை.

இத்தனைப் பொய்யான, ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் என் மீது சுமத்தப்பட்ட போதும் அவற்றை மறுத்ததற்கு மேலதிகமாக எனது சகவேட்பாளர்கள் எவருக்கும் எதிராக தேர்தல் காலத்திலே நான் ஒரு வார்த்தை கூட பேச வில்லை. தேர்தலில் நேரடியாக போட்டியிடாத திரு. தவராசாவிற்கு எதிராக கூட, அவருடைய பெயர் தேசியப் பட்டியலில் இருந்த காரணத்தினால், நான் எதுவும் கூறவில்லை. அவரைப் பற்றி சொல்வதற்கு ஏராளமான விடயங்கள் இருந்த போதிலும் அவர்கள் செய்த தவறை நானும் செய்யக்கூடாதென்பதற்காக மௌனம் காத்தேன்.

இவ்வளவு தாக்குதல்களும் தேர்தல் காலத்திலே எனக்கெதிராகவும் திரு. சிறிதரனுக்கு எதிராகவும் கட்சி உறுப்பினர்களாலேயே நடத்தப்பட்ட போதும் பதிலுக்கு நாமும் அவ்வாறே செயற்பட முடியாமல் கைகள் கட்டப்பட்ட நிலையிலும் கூட, யாழ் தேர்தல் மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பாக திரு. சிறிதரனும் நானும் மட்டுமே வெற்றி பெற்றிருக்கிறோம். இது கட்சி முக்கியஸ்தர்கள் கட்சியின் சக வேட்பாளர்கள் எடுத்த முயற்சிகளை முறியடித்து பெற்ற வெற்றி. எமக்கெதிராக செயற்பட்டவர்கள் தாமும் தோற்று கட்சிக்கும் பாரிய தோல்வியை பெற்றுக்கொடுத்திருக்கிறார்கள். (மிகுதி நாளை)

## மீண்டும் சர்வதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

19 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் நான்கரை வருடங்கள் முடிவடைந்த பின்னரே ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும் என்ற நிலை காணப்பட்டது. 19 வருவதற்கு முன்னர் ஒன்றரை வருடங்களுக்கு பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது. தற்போது அது ஓராண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆகவும், இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 40 ஆகவும் இருக்க வேண்டும் என்ற வரையறை நீக்கப்பட்டுள்ளது.

இதன்படி தமக்குத் தேவையான விதத்தில் அமைச்சர்களை நியமிப்பதற்கான வாய்ப்பு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குக் கிட்டும்.

அதுமட்டுமல்ல பிரதமர் மற்றும் அமைச்சர்கள் பதவி நீக்குவதற்கும், எந்தவொரு அமைச்சையும் தனக்குகீழ் கொண்டுவருவதற்கான அதிகாரமும் ஜனாதிபதியின் கைகளுக்குள் சென்றடையும். 19 அமுலுக்கு வருவதற்கு முன்னரும் இதே நிலைமை காணப்பட்டது.

இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது, தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றம் வரவும் முடியாது என்ற நடைமுறையும் 20 ஊடாக நீக்கப்படவுள்ளது.

உயர் பதவிகளுக்கான நியமனங்களை வழங்கும் அரசமைப்பு பேரவை நீக்கப்பட்டு, நாடாளுமன்றப் பேரவை என்ற விடயம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பு பேரவையில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும், மூன்று சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும், நாடாளுமன்ற பேரவையில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு கதவடைப்பு செய்யப்பட்டுள்ளது. பிரதம நீதியரசர், பொலிஸ்மா அதிபர் உட்பட உயர் நியமனங்களை வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடைத்துள்ளது.

நாடாளுமன்ற பேரவையில் பிரதம அமைச்சர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமரின் பிரதிநிதி, எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதி என 5 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வயதெல்லை 35 இலிருந்து 30 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 ஆண்டுகள், இரண்டு தடவைகள் மாத்திரமே அந்தப் பதவியை வகிக்கலாம் என்ற 19 இன் ஏற்பாடு 20ஆவது திருத்தச் சட்டமூலத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இரண்டு சுயாதீன ஆணைக்குழுக்கள் நீக்கப்பட்டுள்ளன. தேர்தல்கள் ஆணைக்குழு உட்பட 19 இன் பிரகாரம் உருவாக்கப்பட்ட ஏனையவை அதேபோன்று தொடரும். தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. தலைவரையும் அவரே நியமிக்கலாம்.

20ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு அமைச்சரவை நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியுள்ள நிலையில், வர்த்தமானியிலும் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. சமூகக் கருத்தாலுக்காக இரு வாரங்கள் அவகாசம் வழங்கப்படும். ஏதேனும் சர்ச்சைகள் இருப்பின் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம். அதன்பின்னரே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின்போதுகூட தேவையான திருத்தங்களை மேற்கொள்ளலாம். எனவே, தற்போது முன்வைக்கப்பட்டுள்ள '20' இறுதிப்படுத்தப்பட்டது அல்ல. திருத்தங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பும் உள்ளது.

தேசிய கீதம், தேசியக் கொடி, ஒற்றையாட்சி, பௌத்த மதத்துக்கான முன்னுரிமை உட்பட அரசமைப்பிலுள்ள 12 விடயங்கள் சார்ந்தவற்றுடன் தொடர்புடையவற்றை மாற்றுவதாக இருந்தாலே சர்வஜன வாக்கெடுப்பு தேவைப்படும். எனவே, நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் 20ஐ நிறைவேற்றலாம். சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டிய தேவை எழவில்லை என சட்டமா அதிபரும் குறிப்பிட்டுள்ளார்.

20 ஆவது திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறிய பின்னர் அதில் சபாநாயகர் கையயாப்பம் இடும் தினத்தில் இருந்து சட்டம் நடைமுறைக்கு வரும்.

காலைக்கதிர் Kalaikkathir

# நல்லாட்சி அரசாங்கத்தினால் வரையப்பட்ட அரசமைப்பு நகல் வடிவத்தை ஏற்கமுடியாது!

## அமைச்சர் உதய கம்மன்பில கூறுகின்றார்



கொழும்பு, செப்.04

நல்லாட்சி அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட யாப்பு திட்டத்தில் நாட்டை சமஷ்டியாகப் பிரிப்பதற்கான விடயங்கள் உண்டு. அதனால் அதனை எற்றுக்கொள்ள முடியாது என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், 20 ஆவது அரசமைப்புத் திருத்தம் அமைச்சரவையில் ஆராயப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் 3 வாரத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்படும். நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடனே இது நிறைவேற்றப்படும். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தற்பொழுது மேற்கொண்டுள்ளது.

இந்தத் திருத்தத்திற்கு எதிராக எவராவது நீதிமன்றம் சென்றால் மேலும் 3 வார காலம் செல்லும். புதிய அரசமைப்பை விரிவாக ஆராயாமல் அரசாங்கம் ஒருபோதும் தனைநிறைவேற்றாது.

சகல தரப்பினரும் கருத்துக்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். புதிய அரசமைப்பு வகுப்பது ஒருவிடயம். இதற்கு பிரசித்திபெற்ற யாப்பு சட்டத்தரணி ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தக் குழுவே இதனை ஆராயும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## நடுத்தர வருமானத்தை பெறுவோருக்காக விசேடமாக வீட்டுக்கடன் வசதித் திட்டம்

நாடளாவிய ரீதியில் அரச, தனியார் துறைகளில் பணியாற்றும் நடுத்தர வருமானம் பெறுவோர் சொந்த வீடொன்றை வாங்குவதற்கு வாய்ப்பேற்படுத்திக்கொடுக்கும் வகையிலான புதிய செயற்திட்டமொன்றை அரசாங்கம் அறிமுகப்படுத்தியிருக்கிறது.

அரச மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றுகின்ற நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கு, அவர்களுடைய வருமானத்திற்கு ஏற்றவாறாக வீடொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவான செயற்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு கடந்த மே மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அதன்படி இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான ஆரம்ப மூலதனத்தைத் திரட்டிக்கொள்வதற்கான 5 வருட காலத்திற்கு செல்லுபடியாகக் கூடியவாறாக 2 ஆயிரத்து 500 கோடி ரூபா நிதியைக் கடனாக வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு கோரியிருந்தது. நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிதியின் ஊடாக நிர்மாணிக்கப்படும் வீடுகள் நடுத்தர வருமானம் பெறுபவர்கள் கொள்வனவு செய்யக்கூடிய விலையில் விற்கப்படும் அதேவேளை, அதன்மூலம் பெறப்படும் வருமானத்தின் ஊடாக இந்தத் திட்டத்திற்காகக் கடனாகப் பெறப்பட்ட மூலதனம் மீளச்செலுத்தப்படும்.

அதேவேளை இந்த செயற்திட்டத்தின் கீழ் வீடுகளை வாங்குவதற்கு முன்வரும் நடுத்தர வருமானம் பெறும் ஊழியர்களுக்கு அரசவங்கிகளின் ஊடாக 25 முதல் 30 வருட மீளச்செலுத்தும் காலத்திற்குக் குறைந்த வட்டிவீதத்தில் வீட்டுக்கடனைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

## பிரதமர் மஹிந்தவுடன் கிழக்கு ஆளுநர் பேச்சு



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்துக்கும் இடையே முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தின் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் ஆளுநரினால் இதன்போது பிரதமருக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

அத்துடன் கிழக்கு மாகாண அபிவிருத்தி செயற்பாடுகளை விரைவுபடுத்துவதற்குத் தேவையான எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இயற்கை அழகு கொண்ட கிழக்கு மாகாணத்தில் சுற்றாடல் துறையை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துள்ள தொல்பொருள் பாரம்பரியத்தைப் பாதுகாப்பது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் பிரதமரின் செயலாளர் காமினி செனரத்வும் கலந்துகொண்டார்

## தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு தமிழ் தெரிந்த பொலீஸாரை நியமிக்குக!

### நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம்



கொழும்பு, செப்.04

புத்தளம் மாவட்டத்தில், தமிழ் மொழியில் பரிச்சயம் கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை, தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழக் கூடிய ஒவ்வொரு பொலிஸ் பிரிவுகளுக்கும் நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில், பதில் பொலிஸ்மா அதிபருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

புத்தளம் தேர்தல் தொகுதியில் தமிழர்களும் முஸ்லிம்களும் சுமார் 70 வீதம் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன், புத்தளம் மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் சுமார் 25 வீதம் வாழ்கின்றனர். குறிப்பாக, புத்தளம், கல்பிட்டி, முந்தல், உடப்பு, நுரைச்சோலை மற்றும் வணாத்தவில்லு பொலிஸ் பிரிவுகளில் வாழ்பவர்களில், பெரும்பாலானோர் தமிழ் பேசுவோர்களாக இருக்கின்ற போதும், அவர்கள் தத்தமது பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளைப் பதிவு செய்யவும், ஏனைய கருமங்களை ஆற்றுவதற்கும் செல்கின்ற போதும், சிங்கள மொழி தெரியாத காரணத்தால், தங்களுடன் மொழி பெயர்ப்பாளர் ஒருவரை கட்டாயமாக அழைத்துச் செல்லும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகின்றனர். அது மாத்திரமின்றி, தமது மனதில் உள்ள விடயங்களை அச்சொட்டாக உள்ளபடி வெளிப்படுத்துவதில் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், எனது கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு வரப்பட்டுள்ளமையால், பதில் பொலிஸ்மா அதிபராகிய நீங்கள் இதில் உரிய கவனம் செலுத்துமாறு வேண்டுகின்றேன்.

தமிழ் மொழியில் பரிச்சயம் கொண்ட, தமிழில் முறைப்பாடுளைப் பதிவு செய்யக்கூடிய மற்றும் சரளமாக தமிழில் உரையாடக் கூடிய பொலிஸ் உத்தியோகத்தர்களை, தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் இடங்களிலுள்ள ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும், குறிப்பாக நியமித்து உதவுமாறு கோரிக்கை விடுக்கின்றேன்.- என்று அலி சப்ரி ரஹீம் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மஞ்சள்,மிளகுக்கு விலை நிர்ணயிக்கத் தீர்மானம்

மஞ்சள் மற்றும் மிளகுக்கு நிலையான விலை ஒன்றை வழங்கி பயிர்ச் செய்கையாளர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மஞ்சள் மற்றும் மிளகு பயிர்ச் செய்கையாளர்களை பாதுகாப்பதற்காக அவற்றை இறக்குமதி செய்வது முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியாக சந்தை வாய்ப்புக்களை கண்டறிந்து ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலம் உயர் விலை ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான சூழலை உருவாக்குவதன் முக்கியத்துவம் பற்றியும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக நேற்றுப் பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

மஞ்சள் மற்றும் மிளகுத் தேவையை உள்நாட்டு பயிர்ச் செய்கையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாக ஏற்றுமதி செய்வதற்கும் முறையான திட்டமொன்றை தயாரித்தல் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

100 கிராமங்களில் மஞ்சள் மற்றும் இஞ்சியை பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, குருந்துகஹ, ஹெதெம்ம பிரசேத்தில் ஏற்றுமதி வலயம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.09.2020 இல் வெளியிடப்பெற்றது.